பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 12 | திங்கட்கிழமை (26.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 158

# இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்க அரசு இணக்கம்?

## 13-வது திருத்தச் சட்டம் இடம்கொடுப்பதாகவும் தகவல்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள அரசு, புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கும் வகையிலும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்குபற்ற வைக்கும் வகையிலும் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்குவதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தற்போது எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதும் அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்றும் இச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கி தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சியை தடங்கலின்றித் தொடர முடியுமெனவும் அரச உயர் வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இதன் ஒரு கூட்டாகவே அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்துவதில் தோல்வி கண்ட நோர்வே சமாதான தூதுவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அவசர அழைப்பின் பேரில் மீண்டும் கொழும்புக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கட்ட முயற்சி

# நோர்வேத் தூதுவர் எரிக்சோல் நேற்று கொழும்பு வந்தார்!

# பிரதமருடன் சந்திப்பு நாளை வன்னி பயணம்

(நமது நிருபர்)

**சமாதான முயற்சிகளை மீண்டும் தொடருவது குறித்தும் இடைக் கால நிர்வாகசபை அமைப்பது குறித்தும் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைப் போக்கி இரு தரப்பினரையும் மீண்டும் பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவருவதற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நோர்வேயின் சிறப்பு தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்று திடீரென கொழும்பு வருகை தந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து உரையாடியுள்ளார்.**

**இதேவேளை நாளை வன்னி சென்று விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திக்கவுள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே கடந்த 14 மாதங்களாக நடைபெற்றுவந்த 6சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுப்பதற்கும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகளை பங்குகொள்ளச் செய்து இருதரப்பினருக்கும் இடையே நம்பிக்கையுடன் கூடிய புரிந்துணர்வை மீண்டும் ஏற்படுத்தும் நோக்குடனும் கொழும்பு வந்துள்ள நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சமாதான செயலக பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக ஆகியோரைச் சந்தித்து

(10ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
இன்று உங்களின்
சங்குநாதம்
விஷேட அரசியல் கட்டுரையுடன்
விலை ரூபா. 14/-

# தென்மாகாண அமைச்சர் நேற்று சுட்டுக்கொலை

(கொழும்பு)

தென்மாகாண சபையின் மீன்பிடி நீர்ப்பாசன விவசாயத்துறை அமைச்சர் நேற்றுக்காலை இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எம்.கே.ரஞ்சித் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்திலுள்ள சி.ஐ.டி பிரிவில் கையொப்பத்தை இட்டுவிட்டு காரில ஏற முற்பட்டபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் கடந்த மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் சி.ஐ.டி பிரிவில்

(02ம் பக்கம் பார்க்க)

# போராளிகள் திருப்பி அழைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் அனைவரும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிற்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்

(10ம் பக்கம் பார்க்க)

## புதிய கூட்டு முன்னணியின்

# பொதுச் செயலர் பதவியை ஜே. வி. பி கோருகிறது

(கொழும்பு)

புதிய கூட்டு முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை ஜே.வி.பி கோரியிருப்பதாகவும் அதனை சுதந்திரக் கட்சி விட்டுக் கொடுக்க மறுத்து வருவதாகவும் அதுவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் தாமதத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது கூட்டுத்தலைமை பதவிகளை உருவாக்குவதென்று சுதந்திரக் கட்சி ஆலோசித்து வருகிறதாம். பொதுச் செயலாளர் பெயரிலேயே கூட்டமைப்பு பதிவு செய்யப்பட விருப்பதால் இதனை ஜே.வி.பி.யிற்கு

(02ம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஹயஸ் வானில் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத நபர்களினால் ஹயஸ் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியில் கல்வி பயிலும் மாணவனான பொலிகண்டியைச் சேர்ந்த சிவபாலசிங்கம் சரவணன் (வயது-21) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பொலிகண்டி விளையாட்டு மைதானத்தில் பிரஸ்தாப மாணவன் இளைஞர்களுக்கு உதைபந்தாட்ட பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்தார். மாலை 4.30 மணியளவில் ஹயஸ் வான் ஒன்றிலும் மூன்று மோட்டார் சைக்கிள்களிலும் வந்த இனம்தெரியாத நபர்கள் பிரஸ்தாப மாணவனை அணுகி முக்கியமான விடயம் ஒன்று குறித்துப் பேச வேண்டுமெனக் கூறி ஹயஸ் வான் நின்ற இடத்திற்குச் கூட்டிச்சென்றனர்.

மாணவன் வானுக்கு அருகில் சென்றதும் திடீரென எதிர்பாராத விதமாக நிலத்தில் கீழே தள்ளி விழுத்தப்பட்டதுடன் வானுள் தூக்கி ஏற்றப்பட்டு, கொண்டு செல்லப்பட்டுள்ளார். மேற்படி சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் அச்சமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. மாணவன் கடத்தப்படுவதற்கு முன்னராக குறித்த வான் அப்பகுதி வீதியால் பல தடவைகள் மாறிமாறிச் சென்றுவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவன் கடத்தப்பட்ட பகுதியில் இராணுவ முகாம் அமைந்திருப்பதுடன் அப்பிரதேசம் படையி

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### காணவில்லை

வளர்ப்பு சிவப்புநிற 5 வயது ஜேசிப்பசுவும் - அதன் கன்று கோப்பிநிற 2 1/2 வயது, கயிற்றுடன் 22.05.2003 வியாழக்கிழமையிலிருந்து காணவில்லை. காண்பவர்கள் மனிதாபிமான அடிப்படையில் உரிமையாளர் ச.பெ.வரதராசன் இல 12, 1ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம் தொடர்புகொள்க சன்மானம் வழங்கப்படும். (6975)

## மாலைதீவிலிருந்து நிவாரண உதவிகள்

(கொழும்பு)

தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாலைதீவு வர்த்தக அமைச்சர் 30 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

இதேவேளை,வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ சர்வதேச நாடுகள் பல முன் வந்து இருக்கின்றமை இங்கு குறிப்பிடத் தக்கவை. (க-10)

## நூல்கள் இரவல் வழங்கும் பகுதி ஆரம்பம்

(அளவெட்டி)

வேலணைப் பிரதேசசபை பொது நூலகத்தில் நூல்கள் இரவல் வழங்கும் பகுதி இன்று திங்கள் காலை 10.00 மணி முதல் இயங்க உள்ளதாக நூலகர் செ.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேசசபை செயலாளர் செ. சண்முகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூலக உதவியாளர்கள், பொது மக்கள், வேலணைப்பிரதேச சபை ஊழியர்கள் பலரும் கலந்து கொளள உள்ளனர். (க-83)

## உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பங்குரு விஸ்பதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

காலை 9.00 மணிமுதல்12 மணிவரை காலை உற்சவமும் மாலை உற்சவம் 5மணிக்கு ஆரம்ப மாகித் தொடர்ந்து நடைபெறுவ துடன் சொற்பெருவள்ளல இ.சிவபா லனின் சொற்பொழிவும் இடம் பெற்றுள்ளது. (க-08)

# யாழ் மாவட்ட மக்களின் அவலத்தைப் போக்க 2003ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை பெற்றுத்தருமாறு வேண்டுகோள்

## அமைச்சர் மகேஸ்வரன் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டிற்கான செலவீனங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை நீண்டகாலமாக வடக்கு - கிழக்கில் தொடர்ந்த யுத்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களுக்கென ஒதுக்கும்படி தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கதிர்காமருக்கு அனுபபிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவில் இக்கடிதத்தை தங்களுக்கு எழுதும் நோக்கு யாதெனில் தங்கள் ஒத்துழைப்புடன் சீரழிந்துபோன யாழ். மாவட்டத்தைத் திரும்பவும் புனருத்தாரணம் செய்யவேண்டும் என்பதற்கேயாகும்.

கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் இந்த நாட்டில் மிகவும பயங்கரமாக சேதப்படுத்தப்பட்டது யாழ்ப்பாண மாவட்டமாகும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

விமானக் குண்டுவீச்சாலும் ஆட்லறி தாக்குதலாலும் யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கட்டடங்களும் உடைந்திருப்பதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

10 ஆயிரம் இற்கும் அதிகமான வீடுகளில் பல சேதப்பட்டும் சில தரை மட்டமாகவும் போயுள்ளது. இவ்வாறாக பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், இந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளும் சிதைந்து மறைந்து போயுள்ளன.

நீங்கள் ஒரு யாழ்வாசி என்றும உங்களுடைய பரம்பரை வீடு இன்னும யாழ்ப்பாணத்தில் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும் உங்களுடைய பதில் விரைவில் எதிர்பார்க்கிறேன் உங்கள் பதிலைகிடைத்ததும் நான தலைவராக இருக்கும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு, செலவு அமைப்புக்கு உங்களது சம்மதத்துடன் வேண்டிய தீர்மானங்களை சமர்ப்பிப்பதற்கு தங்களுடைய பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றேன்.

இவ்வாறு அக்கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## உரவகைகளை இறக்கும் பணிகள் திருமலையில்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உரவகைகளை திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், கப்பல்துறை, துறைமுகஅபிவிருத்தி அமைச்சருமான றவூப்ஹக்கீம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் வழிகாடடல் குழுவொன்றையும் நியமித்துள்ளார்.

இலங்கைத்துறைமுக அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திஸ்ஸ நாயக்க இக்குழுவுக்கு தலைமை தாங்குகிறார்.

உரவகைகளை இறக்குமதி செயயும் பிரதான கம்பனிகள், மற்றும் கப்பல் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் அண்மையில் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் அமைச்சர் இக்குழுவை நியமித்துள்ளார்.

திருகோணமலை துறைமுகத்தில் உரவகைகளை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டுக் கம்பனிகள் ஒத்தாசை அளித்தல், கப்பல் கப்பனிகளுக்கு மேலதிக வசதிகளும் சலுகைகளும் வழங்கப்படும் என அமைச்சர் இச்சந்திப்பின் போது உறுதியளித்தார். இதன் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது கொழுமபுத்துறைமுகத்தில் உரவகைகளை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், திருகோணமலைத் துறைமுகத்தில் உரவகைகள் இறக்கப்பட்டால் விநியோகச் செலவும் கட்டுப்படுத்தப்படுவதுடன் தாமதமின்றி நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் உரவகைகளை அனுப்பி வைக்கவும் முடியும். (தி)

## ஊறுகொடவத்தை சம்பவத்துக்கு சட்டமா அதிபரின் ஆலோசனை

(கொழும்பு)

ஊறுகொடவத்தை தொடர்மாடி வீடொன்றில் அண்மையில் இடம் பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசனின் ஆலோசனையை கோரியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இசசம்பவம் தொடர்பாக தொடர்மாடி வீட்டின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (தி)

## கொழும்பு மாநகர சபை 580 மில். ரூபா வரி அறவீடு

### ஏனையோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாநககர் சபை, நகர சபைக்குட்பட்ட இதுவரை கொடுக்கப்படாதிருந்த பிரதேசங்களில் 580 மில்லியன் ரூபா வரிகள் அறவிடப்பட்டுள்ளது என மாநகரசபையின் பிரதி முதல்வர் ஆகாஷ்தாரி தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் பல அரச நிறுவனங்கள் இன்னும் வரிகளை செலுத்தவில்லை. இவற்றில் தேசிய நீர் விநியோக வடிகால் சபை 171 மில்லியன் ரூபாவையும் துறைமுக அதிகார சபை 126 மில்லியன் ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளது

இதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

---

**தென்மாகாண...**

கையொப்பமிட்டு வந்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் சி.ஐ.டி பொலிஸ் பிரிவுக்குச் சென்ற இவர் கையொப்பத்தை இட்டுவிட்டு 10.15 மணியளவில் தான் வந்த காரில் ஏறமுற்பட்டார். அப்போது வேறொரு வாகனத்தில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் பிஸ்டலாலும், ரி-56 ரகத் துப்பாக்கியாலும் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த அமைச்சர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார். அமைச்சருடன் கூடவந்த நபர் ஒருவரும் இத்துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சர் மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சி.ஐ.டி பிரிவில் கையொப்பமிடுவதற்கு வரமுன்னர் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிவிட்டே அமைச்சர் அங்கு சென்றுள்ளார்.அமைச்சர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றதுடன் அமைச்சரின் படுகொலைக்கு பொலிஸாரின் அசமந்தப் போக்கே காரணம் எனவும் குற்றம் சாட்டினார். அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவரது பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸாருக்கு ஏற்கனவே அறிவித்திருந்த தாகவும் எதிர்க்கட்சித் தலைவர் பொலிஸார் மீது சீறிப்பாய்ந்தார். (த)

---

**பொதுச்...**

விட்டுக்கொடுக்க முடியாதென்று அவர்கள் கருதுகிறார்கள். ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச இது பற்றி தெரிவிக்கையில், கூட்டு முன்னணியாகச் செயற்படும் போது ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அதிகாரப் பதவி இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

ஜே.வி.பி நிர்வாக ரீதியிலான அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்துகிறது. சுதந்திரக்கட்சி ஒரு அரசியல் ரீதியான அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்துகிறது இதன் இறுதி வரைபை ஜனாதிபதி சந்திரிகா திருப்பி அனுப்பி இது தொடர்பான சொற்பிரயோகங்களில் திருத்தம் செய்யுமாறு கேட்டிருக்கிறார். அதாவது அதிகாரங்கள் மத்தியிலும் நிர்வாக நிறைவேற்று கட்டமைப்பு மாநிலத்திலும் இருக்கலாமென்றும் ஜே.வி.பி கருதுகிறது. சமஷ்டி போன்ற பிராந்திய அமைப்புக்களை உள்ளடக்கக் கூடியதாக அரசியல் ரீதியான அதிகாரப் பரவலாக் கத்தை சுதந்திரக்கட்சி வலியுறுத் துகிறது.

எதுவாயினும் ஜே.வி.பியின் மத்திய குழு புரிந்துணர்வு ஒப்பந்த வரைபை ஏற்றுக்கொண்டு விட்டதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ந)

---


தேவி திருவருள் துணை

வடமராட்சி வடக்கு. தும்பளை இலட்சுமணன் தோட்டம்

அருள்மிகு ஸ்ரீவீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தான

வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

18.05.2003- 11.06.2003

சுபமங்களம் நிறைதரு சுபானு வருடம் வைகாசித் திங்கள் 4ம் நாள் (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணியளவில் மேற்படி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி வைகாசிமாதம் 28ம் திகதி புதன்கிழமை (11.06.2003) வரை வெகு விமரிசையாக பயபக்தியுடன் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகைதந்து அம்பிகை அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

திருவிழா உபயகாரர்கள் (தொடர்-3)

| | | | |
|---|---|---|---|
| 16. | 02-06-2003 | திங்கள் | பொ.இராசதுரை, மகாலட்சுமி வாணிபம் பருத்தித்துறை |
| 17. | 03-06-2003 | செவ்வாய | சிறிதரன் குடும்பம், ஹரன் நகைமாடம் பருத்தித்துறை |
| 18. | 04.06.2003 | புதன் | ஜீவதாஸ் குடும்பம், கற்கோவளம் ஸ்ரீ முருகன் தேவஸ்தானம், ஆதீனகர்த்தா |
| 19. | 05.06.2003 | வியாழன் | வ.தங்கராசா மேத்திரியார் |
| 20 | 06.06.2003 | வெள்ளி | மகாலிங்கம் + மகாலெட்சுமி குடும்பம் |
| 21. | 07.06.2003 | சனி | பசுபதி தேசிங்கராசா குடும்பம் |
| 22. | 08-06-2003 | ஞாயிறு | செல்லத்துரை செல்வேந்தினி - குடத்தனை (சும்மாட்டியார்) |
| 23. | 09-06-2003 | திங்கள | வேட்டைத்திருவிழா - பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் |
| 24. | 10-06-2003 | செவ்வாய் | தேர்த் திருவிழா - திருமதி அருள்நங்கை சண்முகநாதன்+ சந்துதன் புதிய உயர் கல்லூரி யாழ்ப்பாணம் |
| 25. | 11-06-2003 | புதன் | பகல் சங்காபிசேகம் - பொதுமக்கள், ஆதீனகர்த்தா இரவு திருவிழா பா. சுப்பிரமணியம், மாவட்ட நீதிபதி கலை நிகழ்வுகள் இளைஞர் விழா சார்பாக ந. கேதீஸ்வரா, தாமிலாஸ் தொலைத்தொடர்பகம் |
| 26 | 12-06-2003 | வியாழன் | அன்னதானம் க.சிறிதரன், ஜேர்மனி |

ஆதீனகர்த்தா

சிவஸ்ரீ. தியாகசோமஸ்கந்தராஜாக்குருக்கள்

(அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத் தலைவர்)

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் பிரதமகுரு.

(7087)

# இரத்தினபுரி, களுத்துறை மாவட்ட வெள்ள அனர்த்தம்

# எமது மக்களின் கடந்தகால அவலவாழ்வையே நினைவுபடுத்தியது

## தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியாமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு உதவுவதன் பொருட்டு நாம் அங்கு சென்று அவர்களின் நிலைமைகளை



நேரில் பார்த்தபோது எமது மக்கள் கடந்த கால யுத்தங்களின்போது பட்ட துன்பங்களும் துயரங்களுமே நினைவிற்குவந்தன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்டத்திற்கான அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை ஆகிய இடங்களுக்கு குறிப்பாக, சிங்கள மக்கள் வாழும் இடங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதன் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சென்று அங்குள்ள மக்கள் படும் துன்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டபோது, தமக்கிடையே ஏற்பட்ட மன உணர்வுகள் பற்றி வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் தொடர்ந்தும் கூறுகையில், இதேபோன்ற நிலையில் தான் எமது மக்களும் கடந்த காலங்களில் வாழ்ந்து வந்தார்கள். எமது மக்கள் பட்ட வேதனைகளையும் அவர்கள் எதிர்நோக்கிய இழப்புக்களையும் மீண்டும் நினைவுபடுத்தும் வகையில் இச்சம்பவம் அமைந்திருககிறது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் இம்மக்கள் எமது நிவாரணப் பொதியினைவிட, எமது ஆறுதல் வார்த்தைகளையே மிகவும் எதிர்பார்த்துள்ளார்கள் என்பதை நாம் அவர்களுடன் கலந்துரையாடிய வேளையில புரிந்துகொள்ள முடிந்தது.

அன்போடும், ஆர்வத்தோடும் வரவேற்று நீண்டகாலமாக தமது மனங்களில் சுமந்து வந்த உண்மை நிலைப்பாட்டை எமக்கு எடுத்துக் கூறினார்கள்.

அவர்கள் எமக்குக் கூறியதாவது, நாங்கள் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் எமது சகோதரர்களாகவே நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இங்கிருக்கின்ற அரசியலும் அரசாங்கமும் தான் எம்மையெல்லாம் வேறுபடுத்திக் காட்டுகின்றன. தவிர எமக்கும் உங்களுக்கும் எந்தவிதமானதொரு பகையுணர்வும் இல்லையெனத் தெரிவித்தனர்.

அத்துடன் அவர்கள் போர் என்பது இனிமேல் இலங்கையில் இல்லாதிருக்க வேண்டும் என்பதை எம்மிடம் விலிறுத்திக் கூறியுள்ளார்கள்.

அதற்கு நாங்களும் சில விடயங்களை தெளிவுபடுத்தி, அவர்களுக்கு சில ஆலோசனைகளைக் கூறினோம்.

குறிபாக போர் மீண்டும் நடைபெறக்கூடாது என்பதற்காகவே நாம் மிகவும் பொறுமையுடனும், ஆர்வத்துடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலதத்தில் செயற்பட்டு வருகின்றோம்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததும் எவ்வளவோ உயிர், உடைமை அழிவுகள் குறைந்திருக்கின்றதுடன், நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படாவிட்டாலும் ஓர் அமைதியான சூழ்நிலை மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. அதற்கு நாமும் உடனபட்டு அரசுடன் ஒத்துப்போகின்றோம்.

இத்தகைய அமைதியான சூழ்நிலை அதாவது, நிரந்த்ர சமாதானம் நாட்டில் தொடர்ந்தும் நிலவ வேண்டுமானால் தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து தமிழ் மக்களுக்குரிய நல்ல தீர்வினை வழங்குவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என நாம் அவர்களை கேட்டுள்ளோம்.

அவர்களும் தாம் அரசிற்கு வேண்டிய அழுத்தங்களைக் கொடுப்பதாகவும் எம்மிடம் கூறினர்ர்கள் என்றார். (க-10)

# அரசு 309 பில்லியன் ரூபா வருமானத்தை

# அடுத்த நிதியாண்டில் எதிர்பார்ப்பு

## அமைச்சர் திஸநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அதிக வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்படும் என அமைசசர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பேருவளையில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், ஐக்கிய தேசிய முன்னணி அரசு 309 பில்லியன் ரூபர் வருமானத்தை அடுத்த ஆண்டில் எதிர்பார்க்கிறது.

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடன்களுக்கான வருடாந்த வட்டி, தவணைப் பணம் என்பன அடுத்த ஆண்டில் 40 பில்லியன் ரூபாவால் குறைக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டில் செய்யப்பட்ட முதலீட்டைவிட அதிக முதலீட்டை அரசு அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளும்.

அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் மூலம் பெறப்பட்டிருக்கும் வாய்ப்புக்கள் மேலதிக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தரும்.

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள் வேலைவாய்ப்பு செயற்றிட்டங்களுக்காக ஆண்டுதோறும் 10 பில்லியன் ரூபாவை வழங்கவுள்ளன.

இத்தகைய நிதியுதவிகள் அடுத்த ஆண்டுக்கு மட்டுமன்றி தொடர்ந்தும் வழங்கப்படும்.

அந்நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

சமாதானம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரு முக்கிய விடயங்களையும் மிகவும் அவதானமாகக் கையாண்டு செல்லும் அரசாங்கத்துக்கு, நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான பிரச்சினையை ஜனாதிபதி கிளறிவிட்டுள்ளார்.

ஐககிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆடசிப் பொறுப்பை கையேற்றது முதல், நாடு படிப்படியாக அபிவிருத்தி அடைந்து வருவதை கண்ணுற்ற சிலர் அதற்கு எதிரான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, உலகிலேயே மிகவும் பலம்வாய்ந்த அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகள் ஏனைய நாடுகளில் இடம்பெறும் பேச்சுக்களுடன் ஒப்பிடும்போது மிகவும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் உள்ளன.

அத்துடன், இந்நிலைமையின் கீழ் நாட்டைப் பிளவுபடுத்தாமல் அனைத்து இன மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தற்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மீது முழு அளவில் நம்பிக்கையைக் கொண்டு, சந்தர்ப்பவாத கட்சிகளுக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது எனவும் அமைச்சர் அங்கு தெரிவித்துள்ளார். (தி)

## காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

# பரிதாப நிலையில் 169 தொழிலாளர் பிரதமருக்கு அவசர மகஜர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றி தற்போது வேலை எதுவுமின்றி நிர்க்கதியாகியுள்ள 169 தொழிலாளர்கள் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரும் அவசர மகஜர் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாதிக்கப்பட்ட ஊழியர் சார்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்த ஊழியர்கள் அநேகமானோர் ஓய்வுபெற்றும் வேறுபலர் மாற்றுத் தொழில் பெற்றும் இன்னும் சிலர் வேலைதேடி வெளிநாட்டிற்கும் சென்றுவிட்டார்கள்.

169 தொழிலாளிகள் மட்டும் தொழிற்சாலை என்றோ ஒருநாள் இயங்கும் அப்போது தாமும் வேலை செய்து உரிய வேதனத்தைப் பெற்றுக கொள்ளலாம் ஏன்ற நம்பிக்கையில் தாங்கள் கொடுக்கும் சிறு பகுதி ஊதியத்தை பெற்றுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் நிர்வாகம் தனது 18.10.2002 ஆண்டின சுற்றறிக்கையின் பிரகாரம் இவர்களை கட்டாய ஓய்வில் செல்லுமாறு பணித்துள்ளதுடன், இவர்கள் வரவை 2002 ஆம் ஆண்டு மார்கழி 1ஆம் திகதியின் பின் பதிவு செய்ய அனுமதிக்க வேண்டாமெனவும் தொழிற்சாலை பொறுப்பதிகாரிக்கு நிர்வாகம் பணித்துள்ளது. இப்பிரச்சினை பற்றி கைத்தொழில் அமைச்சரிடம் ஊழியரின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியதற்கு இணங்க 31.05.2003 வரை வரவு பதிவு செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நர்வாகத்தின் இத்தீர்மானம் நியாயமற்றதாகவும், பாரபட்சம் உடையதாகவும் எனக்குத் தெரிகின்றது.

இத் தொழிற்சாலை நிதி சம்பந்தமான புள்ளிவிபரம் தங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புள்ளிவிபர தகவல் மூலம் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்படடது என்பதை ஏற்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன். இவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதையும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதையும் தொழில்சாலை சார்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆராயின் புரியும். எவ்வாறாயினும் இவர்கள் நட்டஈட்டை ஏற்றுக கொண்டு விலக உடன்படுகிறார்கள்.

ஆனால், மற்றத் தொழிற்சாலை விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க இவர்களுடைய நட்டஈட்டுத் தொகையும் தீர்மானிக்கப்படல் வேண்டும். சீமெந்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் சம்பந்தமான ஆவணமும் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் தாங்கள் தலையிட்டு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

நேரில் கையளிக்கப்பட்ட இம் மகஜரை ஏற்றுக்கொண்ட பிரதம மந்திரி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். - இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

## இயற்கை அனர்த்தங்களின்

# காரணங்களைக் கண்டறிய விசேட செயற்குழு அமைப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவுக்கும், வெள்ளப்பெருக்கிற்கும் உரிய காரணங்களைக் கண்டறிய அரசாங்கம் விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளது.

இக்குழு அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் நியமிக்கப்படுமென சூழல தேசிய வள அமைச்சின் செயலாளர் பி.ஏவகே தெரிவித்துள்ளார்.

சூழல்துறைசார்ந்த நிபுணர்கள் அடங்கிய இக்குமவினர் எதிர்காலத்தில் இத்தகைய அனர்த்தங்களின் விளைவுகளின் சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்தவும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழஙகுவர். அண்மையில் தெனனிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 265 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1500 கோடி ரூபா சொத்துக்களுக்கு நஷ்டம் எற்பட்டது தெரிங்ககே.(கி)

# அரச சேவைப் பதவிகள் ஐந்தை மாற்றியமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் தற்போது நடைமுறையில் உள்ள 5 பதவி முறைகள் மாற்றியமைக்கப் படவுள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் இப்பதவிகள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய வேறுபட்ட 5 பதவிகள் ஒரே தரமுடைய பதவியாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

எழுதுவினைஞர், கணக்குப்பதியுனர், பற்றுச்சீட்டாளர் உள்ளிட்ட 5 பதவிகள் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் என்ற பதவியாக மாற்றப் படவுள்ளது.

இது தொடர்பான சட்ட வரைபுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டதாக ஒருங்கிணைந்த சேவைப பணிப்பாளர் நாயகம் பி.வீரஹாமினி தெரிவித்துள்ளார்.

இந்த 5 சேவைகளையும் மாற்றியமைப்பது தொடர்பாக, சகல தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இணக்கப்பாடு காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# சிகரெட் கடத்தலில் ஈடுபட்டவர் சுங்க அதிகாரியிடம் சிக்கினார்

(கொழும்பு)

பாகிஸ்தான் தலைநகரில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பெருந்தொகையான சிகரெட்டுக்களை கட்டுநாயக்கா விமானநிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். பாகிஸ்தான் தலைநகரில் இருந்து உருளைக் கிழங்குகளை இறக்குமதி செய்த கொள்கலன்களுக்குள் இச்சிகரெட் பைக்கெட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் 200 சிகரெட் கொண்ட 500 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

உருளைக்கிழங்கை இறக்குமதி செய்த வர்த்தக முகவரை பொலிஸார் கைது செய்ததுடன், அவர் இதுபோன்ற நடவடிக்கைகளில் இரு தடவைகள் ஈடுபட்டடையும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இம்மாதம் முற்பகுதியிலும் சிங்கப்பூரிலிருந்து சிகரெட்டை கடத்த முற்பட்ட இளைஞர் ஒருவரை திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## போதைப்பொருள் தடுப்புப் போட்டித் தொடர்

(அளவெட்டி)

மனிதவள அபிவிருத்திக் கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனை பாட இணைப்புக் கிளை மூலம், போதைப் பொருள் தவிர்ப்புக் கல்வி பற்றி நாடளாவிய ரீதியில் போட்டித் தொடர் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

ஆறு வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சிங்கள, தமிழ் மொழிமூலம் இப்போட்டி நடைபெறும்.

பேச்சுப்போட்டி, நாடகப்போட்டி, சிறுகதைப்போட்டி, சுவரோவியம், சித்திரம் எனப் பல்வேறு போட்டிகளை நடாத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது. தத்தம் பாடசாலை அதிபரூடாக இப்போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (க-83)

# மத்தியகிழக்கு சமாதான திட்டம் தயார்

# சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

## ரஷ்யா வேண்டுகோள் விடுத்தது

(மொஸ்கோ)

**மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படுததும் திட்டத்தை, ஸ்ரேல் வரவேற்றுள்ளதை ரஷ்யா பாராட்டியுள்ளது. அத்துடன், இந்தசமாதானத் திட்டத்திற்கு ஏனைய சர்வதேச சமூகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ரஷ்யா வேண்டுகோள் விடுத்துள்ளது.**

ரஷ்யா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியங்கள் ஆகியவற்றுடன் பலஸ்தீனமும் இணைந்து உருவாக்கிய சமாதானத் திட்டத்தை இஸ்ரேல் கடந்த சில வாரங்களாகப் புறக்கணித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இஸ்ரேலிய துருப்புக்கள் பலஸ்தீன அகதி முகாம் ஒன்றை சுற்றிவளைத்துள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பில் 50க்கு மேற்பட்ட இராணுவ வாகனங்கள் ஈடுபட்டதாகவும் ஆனால் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் 'ராய்ட்டர்' செய்திகள் கூறுகின்றன.

32மாதங்களாக தொடரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அறிவித்துள்ள நிலையிலேயே இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமரின் மேற்கண்ட அறிவிப்பிற்குப் பின் இடம்பெற்ற பஸ்தீன அகதி முகாம் சுற்றிவளைப்பானது மத்திய கிழக்கு சமாதானம் குறித்த முயற்சிகளை கேலிக்கூத்தாக்கிவிடும் என சர்வதேச அரசியல்வாதிகள கருத்து வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## உலகின் மிக நீளமான ஓவியம்

(சிங்கப்பூர்)

உலகின் மிக நீளமான ஓவியத்தை வரைந்து சாதனைக்குத் தயாராகி விட்டார் சிங்கப்பூர் ஓவியர் சார்காசி.

100மீற்றர் நீளம், 70செ.மீ அகலம் கொண்ட அந்த வண்ண ஓவியத்தை வரைய அவர் 5நாள் எடுத்துக் கொண்டார்.

தினமும் 2மணி நேரம் மட்டுமே தூங்கினார். இந்தோனேஷிய ஓவியக் கலையின் வடிவில் இவர் வரைந்த வண்ண ஓவியம் கின்னஸ் புத்தகத்தில் பதிவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. (க-9)

## ஆந்திராவில் கடும் வெப்பம் 140பேர் வரையில் பலியாகினர்

(புதுடில்லி)

இந்தியாவில் வீசும் அனல் காற்றினால் இதுவரை 140க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஐதராபாத் பகுதிகளில் 47.5° செல்ஸியத்திற்கு மேல் வெப்பம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆந்திராப் பிரதேச கரையோரப் பகுதிகளில் பருவமழை பெய்யா விட்டால் இந்த வெப்பம் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

கடந்த வருடம் நிலவிய கடும் வெப்பத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆந்திரப் பிரதேசத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## ஈராக் அரச ஊழியர்களுக்கான சம்பளம் அனுப்பிவைப்பு

(பக்தாத்)

ஈராக்கை அமெரிக்க, பிரித்தானியப் படைகள் ஆக்கிரமித்ததன் பின் முதன் முறையாக ஈராக் அரச ஊழியர்களுக்கான சம்பளபணம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

சம்பளப்பணத்தில் பதவி இழந்த அதிபர் சதாம் ஹுசைனின் படங்களே இடம்பெற்றிருந்தன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சாரத்துறைக்கான சம்பளம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாக அறிவித்த அமெரிக்க அதிகாரிகள் அனைத்து ஊழியருக்குமான சம்பளம் எதிர்வரும் யூன் 3ஆம் திகதி வழங்கப்படும் எனவும் அறிவித்திருக்கின்றனர்

இதேவேளை, ஆசிரியர்களுக்கும், மருத்துவத் துறையினருக்கும் சம்பளம் இரட்டிப்பாக உயர்த்தப்படும் எனவும் படைத்துறையினருக்கான சம்பளங்கள் வெட்டப்படும் எனவும் ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி ஜே.கார்னல் அறிவித்திருக்கின்றார். (க-9)

## அமெரிக்கரின் செயலை கண்டித்து ஆப்கான் மக்கள் ஆர்ப்பாட்டம்

(காபூல்)

அமெரிக்கப் படையினரைக் கண்டித்து ஆப்கானிஸ்தான் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றார்கள்.

கடந்த புதன்கிழமை அன்று 4ஆப்கானிஸ்தான் படையினர் அமெரிக்கத் தூதரகத்தின் முன் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூரில் இடம்பெற்றிருக்கின்றது.

தங்களைத் தாக்கவந்தவர்கள் என தவறுதலாக நினைத்ததாலேயே தாம் ஆப்கானிஸ்தான் படையினரைக் சுட்டுக் கொன்றதாகவும் அச்சம்பவத்திற்கு தாங்கள் வருத்தம் தெரிவிப்பதாகவும் அமெரிக்க அரசு இச்சம்பவம் குறித்து அறிவித்திருக்கிறது.

அமெரிக்க எதிர்ப்புக் கோஷமிட்ட வாறு சர்வதேசிய சமாதான படையினர் இதுவரை ஆப்கான் ஆர்ப்பாட்டக்காரர்களை காயப்படுத்தியதாகவும் இதனை ஆப்கானியப் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்ததாகவும், மேற்கத்தேய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, எதிர்ப்புத்தெரிவிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை என ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்ததாகவும் காபூல் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி உலகசாதனையை நிலைநாட்டிய 70வயது தாத்தா

(டோக்கியோ)

எவரெஸ்ட் சிகரத்தை 70வயதில் எட்டி, உலகசாதனையை நிகழ்த்தியிருக்கிறார் ஜப்பானிய தாத்தா ஒருவர்.

யூசிரோ மியூரா என்ற அவர் தன்மகன் உள்ளிட்ட குழுவுடன் எவரெஸ்ட் மலையை வியாழக்கிழமை காலை 11.55மணிக்கு அடைந்தார்.

உடனே தனது கனவு நனவாகி விட்டது என்று டோக்கியோவிலுள்ள தனது அலுவலகத்துக்குத் தொலைபேசி மூலம் சாதனைத் தகவலைப் பகிர்ந்து கொண்டார். டோக்கியோவில் உள்ள அவரது அலுவலகம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன் எவரெஸ்ட் சாதனை நிகழ்த்திய மூத்தவர் இத்தாலியைச் சேர்ந்த மரியோ கர்னிஸ். இவரது வயது 66ஆகும். கடந்த ஆண்டு மே மாதம் இவர் இந்த சாதனையை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## 13 வருட இடைவெளியின்பின்னர் எரிபொருள் விற்பனையை ஈராக் விரைவில் ஆரம்பிக்கும்

(பக்தாத்)


13வருட பொருளாதாரத் தடைக்குப்பின்னர் ஈராக் அதன் எண்ணெய் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளதாக பக்தாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கையில், நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு நடவடிக்கையாக மீண்டும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் விற்பனையை ஆரம்பிக்க உள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள் சபை கடந்த வியாழக்கிழமை நீக்கியதை அடுத்து, இன்னும் ஓரிரு வாரங்களில் ஈராக் அதன் பெற்றோலிய உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் என்றும் ஈராக்கின் எண்ணெய்வள அமைச்சின் பணிப்பாளர் தம்மீர் கஃபான் தெரிவித்தார்.

ஈராக்கின் எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ளும் அதிகாரத்தை ஐ.நாசபை அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் அளித்துள்ளது.

அடுத்தமாதம் நடுப்பகுதி முதல் நாளொன்றிற்கு 1.3முதல் 1.5மில்லியன் பீப்பாய்கள் வரை எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ள ஈராக் உத்தேசித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)



மும்பை கடற்பகுதியில் கடந்த வியாழக்கிழமை தொடங்கிய இந்திய - ரஷ்ய கூட்டுக்கடற்படை ஒத்திகையில் பங்கேற்கும் ரஷ்யாவின் ஏவுகணை எதிர்ப்பு போர்க்கப்பல்.

WORLD NEWS உலக தரிசனம்



அல்ஜீரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் இடிந்த வீட்டுக்குள் 2நாடகளாக சிக்கியிருந்த எமில்கைடி என்ற 2வயது குழந்தையை உயிரோடு மீட்ட சந்தோசத்தில் அக்குழந்தைக்கு முத்தமிடுகிறார் தீயணைப்புப்படைவீரர். இந்த பூகம்பத்தால் 1600க்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டனர்.

## சார்ஸ் தொற்று நோய்க்கிருமி சிங்கப்பூர் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(சிங்கப்பூர்)

சார்ஸ் நோயினை உருவாக்க வல்ல தொற்றுநோய்க் கிருமியினை சிங்கப்பூர் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளார்கள்.

இந்த நோய்க்கிருமிகளில் உயிர் இணை மரபுக்கேற்ற தோற்றம் பெறுவது எவ்வாறு என்பதனை அவ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்த உயிர்நோய் இணைப்பு மரபுக்கீற்று 'ஹரீமா' கூட்டுப் பொருளினால் ஆன புரதமாகும்.

இந்த வைரஸ்கள் தான் சளிப்பிடித்தல், சுவாசக்கோளாறு போன்ற நோய்கள் தோன்றக் காரணமாகின்றன.

சார்ஸ்கிருமி இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வைரஸ். ஆனாலும இது தனித்துவமான தன்மைகளைக கொண்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

இதனிடையே சார்ஸ் கிருமி அடையாளம் காணப்பட்டிருப்பதை உலக சுகாதார நிறுவனமும் உறுதிப்படுத்தியிருக்கின்றது. (க-9)

### தமிழ் மக்கள் மீளக்குடியமர வேண்டுமாயின்

# தமிழ் மக்களின் குடியிருப்புக்களில் இருந்து படையினரின் வெளியேற்றம் அவசியமாகும்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**மீளக்குடியேறுதலை சரியான முறையில் அமுல்படுத்துவதாயின் தமிழ் மக்கள் தாம் மீளக்குடியேற வேண்டிய பகுதிகளில் இருக்கும் இராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டியது அவசியமானதென்றே நான் கருதுகிறேன்.**

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மக்கள் அரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனநாயக இடதுசாரி முன்னணி தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர் கூறுகையில்,

**பெரும்பான்மையினரின் அபிலாஷைகள்**

நான்பொதுஜன ஐக்கிய முன்ணணி, ஐக்கியதேசிய கட்சி என்கின்ற வகையில் அவர்களது கருத்துக்கள் பற்றி பேசுகின்ற போது குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்களுடைய அபிலாஷைகளை தான் அவர்கள் எப்போதும் நிவர்த்தி செய்து வந்திருக்கிறார்களே என்பதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆகவே, இந்த மாற்றத்தை நாம் எப்படி உருவாக்குவது, இந்த நல்லுறவுகளை எப்படி ஏற்படுத்துவது என்று நாம் அறியக் கூடியவர்களாக இருக்கின்றோம்.

தென்னிலங்கை கட்சிகள் காலத்திற்குக் காலம் பல்வேறு மாற்றங்களைக் கொண்டதாக இருந்தாலும் கூட அவை அனைத்துமே சிங்களத்தேசிய கோட்பாட்டை விரும்பி நிற்பதைத்தான் நாம் ஜதார்த்தமாகக் காண்கின்றோம்.

இதனை நான் கருத்தில் கொணடு தான் இன்றைய நிகழ்விலிருந்து பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றேன்.

**போர்நிறுத்த உடன்படிக்கை**

போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து நாம் பேசிய போது, அதில் உள்ள பிரச்சினைகளை ஆழமாகச் சிந்திக்கின்ற போதும் இந்தப் பின்னணியில்தான் நாம் முன்னேற வேண்டி உள்ளது. இன்று ஒரு போர்நிறுத்தம் அமுல்படுத்தப்படுகின்றது. அது உண்மை. ஆனால் அதேநேரத்தில போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள பல்வேறு கருத்துக்கள் பூரணமாக அமுலபடுத்தப்படாத சூழ்நிலையை காணுகின்றோம். இதற்கடுத்த நிலையில் இலங்கை அரசிற்கும் தென்னிலங்கையில் உள்ள பல்வேறு சக்திகளுக்கும் அழுத்தம் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளோம்.

**மீள் குடியமர்வு**

உதாரணமாக மீளக்குடியமர்வை எடுத்துக் கொள்வோமானால் மீளக் குடியமர்வில் சரியான முறையில் அமுல்படுத்துவதாய் இருந்தால் தமிழ் மக்கள் தாம் மீளக்குடியேற வேண்டிய பிரதேசங்களில் இருந்து ராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டியது அவசிய மான கடமையாகத்தான் நான் காண்கிறேன்.

இதனை நாம் சரியான முறையில புரியாமல், இதற்குச் சரியான முறையில் நடவடிககை மேற்கொள்ளாமல் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல் படுத்தப் படுகின்றதா என்பதைப் பற்றி கண்காணிக்க முடியாதுள்ளது.

அடுத்தாக அமெரிக்காவினுடைய தலையீடு, இந்தப் பிரச்சினையில் அவர்களது ஈடுபாடு குறித்து நாம் கவனமாக சிந்திக்க வேணடி உள்ளது. ஒரு மத்தியஸ்தம் வகிக்கின்ற அனுசரணையாளர்கள் தேவையென்ற ஒரு நிலையில் அவர்களது பங்களிப்பும் முக்கியமாகின்றது.

ஆனால், அமெரிக்காவை பொறுத்தவகையில அமெரிக்கா தனது தேசிய நலனைத்தான் முதன்மைப் படுத்துகின்றது. அவர்களுடைய தூண்டுதல் கரணமாகின்றதா, அல்லது அவர்களது ராஜதந்திர செயற்பாடுகள் காரணமாகின்றதா, என்பதை அவர்கள் பல்வேறு கால கட்டங்களிலும் செய்கின்ற உதவிகள் மூலம் நாம் காணக்கூடிய வாறு உள்ளது.

அமெரிக்காவினுடைய கூற்றுக்கிணங்க செயற்படுகின்ற ஒரு சூழ நிலையை அரசாங்கமும் கடைப்பிடிககின்றது. அதேசமயம் தென்னிலங்கையில் இருக்கக்கூடிய பல்வேறு இனவாத சக்திகள் அவர்களுடைய கூற்றுக்களை ஞாபகப்படுத்துகின்றன.

அடுத்ததாக திம்பு கொள்கைகளை அல்லது திம்பு அடிப்படைகளை நாம் எடுத்துக் கொண்டு தான் இந்தப்பிரச்சினைகளை அணுகவேண்டும். ஆனால் திம்பு பிரச்சினைகளை எவ்வளவு தூரம் தென்னிலங்கை மக்கள் சாியாகப புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது ஓர் சந்தேகத்திற்கிடமான விடயமாகஉள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி பாார்க்கின்ற போது விடுதலைப் புலிகளதான் தனிநாடு என்றகோரிக்கையை முன்வைக்கவில்லை. அதனை நாம் வரவேற்று சரியான இலக்கைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களது அபிலாஷைகளைப பூர்த்தி செய்யக்கூடியவாறு இடைக்கால தீர்வுக்கு வரமுடியும் என்ற முடிவில் நாம் ஆணித்தரமாக இருக்கின்றோம்.

**முஸ்லிம்களின் நலன்கள்**

அதேசமயம் முஸ்லிம் மக்களுடைய அபிலாஷைகள், அவர்களுடைய தனித்துவம், அவர்களுடைய பிரச்சினைகள் பற்றியும் இந்தபேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்பட வேணடும்.

ஆனால் அவர்களது விடயம் பற்றி கலந்துரையாடாது தமிழர்களது பிரச்சினைகளுக்கே பேச்சுகளில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருந்தது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலகட்டத்திலிருந்து படிப்படியாக முன்னேறிக கொண்டிருக்கும் நிலையை நாம் காணக் கூடியவாறு உள்ளது.

அதேசமயம், தென்னிலங்கையிலுள்ள இனவாத சக்திகள் தமிழ்மக்களது உணர்வுகளை, அபிலாஷைகளைப் புரிந்து கொண்டவர்களாக தெரியவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையினைப் பொறுத்தவரையில்,

புரிந்துணர்வு உடன்படிக்கையினைப் பொறுத்தவரையில் கூட இதனை மேலும் முன்னெடுப்பதற்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்துவருகின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை ஓர் எதிர்மறையான கருத்தைத்தான தென்னிலங்கை உறவுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றன.

**நல்லுறவு பேணல்**

அதேசமயம், வடக்குகிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழி பேசுகின்ற ராணுவம், பொலிஸார் தொடர்ந்து தமிழ் மக்களுடன் பேணும் உறவு அவர்களுக்கிடையேயான பிரச்சினை எவ்வளவு காலம நீடிக்கும் என்பது ஐயத்துக்கிட மாகவே உள்ளது.

அரசியல் தீர்வு பற்றிப் பார்க்கின்ற போது தென்னிலங்கைத் தமிழ் மக்கள் ஒரு சமஷ்டி அரசு மூலமாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் அதேநேரத்தில், ஜனாதிபதிக்கு எதிராக பொது ஜனஐக்கிய முன்னணி, ஜே.வி.பி தூண்டுதல்களுக்கெதிராக நாம் தொடர்ச்சியாக செயற்பட வேண்டியுள்ளது.

ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் ஒரு அரசியல் பங்களிப்பைச்செய்ய வேண்டிய வகையில் நாம் இருப்பினும் அது சம்பந்தமாக சிங்களக் குழுக்கள் மத்தியிலுள்ள பல்வேறு கட்சிகள், முற்போக்கு சக்திகள் தமிழர்களுடைய அபிலாஷைகளைப் புரிந்துணர வேண்டும் என்ற நோக்கததோடு செயற்படுவதை நாம் காணக்கூடியவாறு உள்ளது.

அடுத்து இந்த பேச்சு மேசையில் ஒரு அனுசரணையாளர்களாக அல்லது ஒரு நடுநிலையாளர்களாக பங்கு வகிக்கின்ற வெளிநாட்டவர்களை பொறுத்தவ்கையில ஒரு புறம் பார்வையாளர்களாகவும் அனுசரணையாளர்களாகவும் திகழ்கின்றார்கள்.

ஜே.வி.பி, பொதுஜனஐக்கிய முன்னணி மற்றும் இனவாத சக்திகளும் ஒரு மாபெரும் பேரணியை உருவாக்க முனைந்த போதும் ஒரு லட்சம் மக்களுக்கு மேல் அவர்களால் திரட்டமுடியவில்லை.

மங்களசமரவீர, அனுரா பண்டார நயக்கா போன்றோர் தற்போதைய நிலையை பயன்படுத்தி ஆட்சியை தாம் கைப்பற்றுவதற்கான வாய்ப்பை பயன்படுத்தும் வகையில் செயற்படுகிறார்கள் என்றே கருதப்படுகின்றது என்பதை மறுப்பதற்கு இல்லை என்றார். (க-7)

# களுத்துறை தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்

## அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதியிடம் நேரில் வலியுறுத்துவார்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறைச்சாலை



யில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஜனாபதியைக் கோரவுள்ளார்.

இது பற்றி இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் "வலம்புரிக்கு" தெரிவிக்கையில், களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலைபற்றியும், அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்பது பற்றியும நாளைய தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளேன். அத்துடன் பயங்கரவாத மற்றும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தணடனை அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கும் படியும் கோரவுள்ளேன்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விசாரிக்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

இநநிலையில் தான் அவர்கள தொடர்ச்சியான உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வருகிறார்கள என குறிப்பிட்ட அமைச்சர் அவர்களை விடுதலைசெய்வதாக அரசு உறுதியளித்து வருகின்ற போதும் இதுவரை அவர்கள் விடுதலை செய்யப்படாது சிறையில் வாடுகினறனர். எனவே இது பற்றி ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு கோரவுள்ளேன்.



அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளால் கோரப்படும் இடைக்கால நிர்வாக சபை குறித்தும் பேசவுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்குகிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரியுள்ளமை எதிர்க்கட்சிகளான பொதுஜன ஐக்கியமுன்னணியும் ஜனாதிபதியும் எதிர்த்து வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கவை. (க-10)



புதுவை அன்பனின் கரைதேடும் ஓடங்கள் நாடகத்தின் ஒரு காட்சி



ஜெறோம் டீசில்வாவின் என்னைப்பார் (Looil atme) ஆங்கில நாடகத்தின் ஒரு காட்சி)



வீரசிங்கம் மண்டபத்திலிருந்து சிறுவர் எழுச்சி ஊர்வலம் ஆரம்பமாகும் காட்சி

# சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

**சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்**

22.05.2003இல் சனி இடப ராசியில் இருந்து மிதுனராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.

23.07.2003இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்கராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.

14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம் விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம், ராசிகளுக்கு மாற்றமடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ் ராசியிலே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.

## மிதுனம்:

*(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்களில் பிறந்தவர்களுக்கு 22.05.2003 முதல் 26.06.2005 வரை சனிபகவான் ஜென்ம ராசியில் இருப்பார்)*

மென்மையான குணமுடைய மிதுனராசி நேயர்களே! கடந்த 2 1/2 வருஷ காலமாக சனிபகவான் உமது ராசிக்கு 12இல சஞ்சரிப்பதால் புதிய முயற்சிகளில் கடினபிரயாசையினால் வெற்றி கிடைத்தது. புதிய முதலீடுகள் செய்ய முடிந்தது. குடும்பத்தில் செலவுகள் அதிகம் என நிகழ்ந்தது.

தற்சமயம் சனிபகவான் உமது ஜென்மராசியில் அமர்வு. இதனால் உடல் நலனில் கவனம், தொழில் வளம் பெருகும். சுறு சுறுப்பாக இருக்க நேரும். இளைய சகோதர வழியில் ஏற்றம கிட்டும். செய் தொழில் எதுவானாலும் வேலைப்பளுகூடும். சிலர் மனைவி பேரில் முதலீடு செய்வர். ஸ்திர சொத்துக்கள் வாங்க இடமுண்டு.

சனிபகவான் உமது ராசிக்கு 1 இலிருந்து கொண்டு தனது 3, 7, 10 ஆகிய பார்வையினால் உமது 3, 7, 10 ஆகிய வீடுகளை பார்வை செய்கிறார்.

சனிபகவான் தனது 3வது பார்வையினால் உமது ராசிக்கு 3வது வீட்டை பார்வை செய்வதால நன்மையே விளையும். சனிபகவான் பார்வையில் 3வது பார்வை மிகவும் விஷேசமானது. இதனால் அறநிலையங்களில் அங்கம் வகிக்க நேரும். கௌரவ பதவிகள் தேடி வரும். உமது இளைய சகோதர வெளிநாடு செல்வர்.

சனிபகவானின் 7வது பார்வையினால் உமது ராசிக்கு 7வது வீட்டை பார்வை செய்வதால் மனைவியின் உடல் நலனின் மிக்க கவனம் தேவை. தொழில் கூட்டாளிகளிடம் சற்று பக்குவமாக நடந்து கொள்ளவும். வீடு, மனை, பூமி வாங்கும் போது அதன் மூல ஆவனங்களை சரிபார்த்து வாங்கவும்.

சனிபகவானின் 10வது பார்வையினால் 10வது வீட்டை பார்வை செய்வதால் தந்தை மூலம் தனவரவுக்கு இடமுண்டு. சிலருக்கு தந்தையின் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. நாட்பட்ட நோய்கள் தீரும். கடன் தொல்லை தராது. கறுத்த மனிதரால் சகாயம் கிட்டும். தொழில் நுட்ப பணிகளில் சிறந்து விளங்க இடமுண்டு.

***வியாபாரிகளுக்கு:***

கணனி சாதனங்கள், மின்னியல், இலத்திரனியல், குடிநீர் விநியோகம், உணவகம், பெண்களுக்கு தேவையான சாதனங்கள் போன்ற வியாபார பிரிவினர் ஏற்றம் அடைவர். அரசு மூலம் இன்னல் இல்லை.

***விவசாயிகளுக்கு:***

பணப்பயிர் அமோக விளைச்சல் தரும். தண்ணீர் பஞ்சம் அகலும். பூர்வீக சொத்தில் வில்லங்கம் அகலும் கால்நடைப் பெருக்கமும வண்டி வாகன வசதிகள் பெருக்கமும் உண்டாகும். பயிர் பாதுகாப்பில் மிக்க கவனம் தேவை.

***பெண்களுக்கு:***

குடும்பத்தில் வீண்வாக்குவாதம் தவிர்த்தல் நலம். நீண்டகால நோய்கள் அகலும். புத்திர பாக்கியம கிட்டும். நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி விடலாம். வேலைக்கு போகும் பெண்களுக்கு வேலை இடமாற்றம் கிடைக்க இடமுண்டு.

**உத்தியோகஸ்த்தர்களுக்கு:**

கல்லூரி, அறநிலையம், தலைமைச்செயலகம், வங்கி மற்றும் நிதிநிறுவனம், தேர்வாணையம் போன்ற பிரிவுகளில் பணிபுரிவோர் ஏற்றம் அடைய இடமுண்டு. விரும்பிய இடமாற்றம் கிட்டும். உயர் அதிகாரிகளின் அன்புப் பிடியில் சிக்கி அதிக வேலைப் பளுவை ஏற்க நேரும்.

**மாணவர்களுக்கு :**

பி.பி.ஏ., எம்.பி.ஏ., மருத்துவம், கட்டடக் கலைஞர், திரைப்படத் தொழில்நுட்பம், கப்பல் கட்டும் தொழில் நுட்பம் போன்ற பிரிவுகளில் பயில்வோர் ஏற்றம் பெறுவர். வாய்மொழி தேர்வில் வெற்றிகிட்டும். சிலர் உயர் கல்விக்கு வெளிநாடு செல்ல இயலும்.

**குருபகவான் சஞ்சார பலன்**

22.07.2003 வரை குருபகவான் உமது ராசிக்கு 2இல் இருப்பார். இதனால் வாக்கினால் வளமும் நலமும் சேரும். கணிசமான பணவரவுக்கு இடமுண்டு.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குருபகவான் 3இல் வருவதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். வேலையில் இடமாறுதல் மற்றும் பதவி உயர்வு பெற இடமுண்டு.

15.08.2004முதல் 13.05.2005 வரை குருபகவான் 4இல் வருவதால் போக்குவரத்து மூலம் தொழில் புரிவோர் ஏற்றம் பெறுவர். கல்வி பயில்வோர் கூடுதல் கவனமுடன் இருப்பது நலம்.

14.05.2005 முதல் குருபகவான் உமது ராசிக்கு 5இல் வருவதால் உயர் கல்விக்கு நிறைய வாய்ப்புள்ளது. கடன் தீரும். அம்மான் வகையினரால் அனுகூலம் கிட்டும். பதவி உயர்வு கிட்டும்.

**ராகு பகவான் சஞ்சார பலன்**

14.08.2003 வரை ராகு பகவான உமது ராசிக்கு 12இல் சஞ்சாரம். இதனால் அடிக்கடி பிரயாணம் செய்ய நேரும். பணம் கையாளும் பணியில் உள்ளவர்கள் மிகுந்த கவனமுடன் பணிபுரிவது அவசியம் ஆகும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை ராகுபகவான் உமது ராசக்கு 11இல் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத தனவரவுக்கு இடமுண்டு. பங்குச் சந்தையில் நல்ல இலாபம் தரும்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 10இல் அமர்வு, இதனால் தொழில வழியில் அதிக அலைக்கழிப்பு உண்டு. எனினும் போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறையினர் மிக்க ஏற்றம் பெறுவர்.

**கேது பகவான் சஞ்சார பலன்**


14.08.2003 வரை கேது பகவான் உமது ராசிக்கு 6இல் அமர்வு. இதனால் கடன்தீரும். ஞானிகள் மகான்களின் நல்லாசி கிட்டும். தெய்வீக பிரார்த்தனை பலிதம் ஆகும். அம்மான் கையில் அனுசரணையான போக்கு காணும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேதுபகவான் உமது ராசிக்கு 5இல் அமர்வு. இதனால் வீடு, மனை வாங்க இடமுண்டு. பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். இஷ்ட தெய்வம் மற்றும் குலதெய்வத்திற்கு பூஜைபோட நன்று.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் 4இல் அமர்வு. இதனால் உடல் நலனில் கவனம் தேவை. வீடு, வண்டி, வகானம் வாங்கும்போது அதன் மூலம் ஆவணங்களை கவனமுடன் பரிசீலித்து வாங்குவது நலம்.

**சனி பகவான் சஞ்சார பலன்**

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனிபகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சாரம் செய்வதால் புதிய கடன் கிடைக்கும். பழைய கடனை தீர்க்கலாம். சகோதர



உறவில் சில தவிர்க்க முடியாத சங்கடம் உண்டாக இடமுண்டு. கவனம் தேவை.

11.07.2003 முதல் 06.01.2004 வரை மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ராகு சாரத்தில் சஞ்சாரம். இதனால் எதிர்பாராத வெற்றிகள் கிட்டும். இத்தருணத்தில் யாருக்கும பிணை நிற்கவேண்டாம். இலத்திரனியல், மின்னியல் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் குருபகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் சரளமான பணப் புழக்கம் உண்டாகும். வாக்கினால் ஜீவனம் புரிவோர் ஏற்றம் பெறுவர். கொடுத்த வாக்கை காப்பாற்றலாம். மனைவி வழியில் ஏற்றம். சில மனைவி பேரில் வீடு, வண்டி, வாகனம் வாங்குவர்.

**சனிபகவான் வக்ரம்**

25.11.2003 முதல் 16.02.2004 வரை மற்றும் 13.11.2004 முதல் 13.03.2005 வரை சனிபகவான் வக்ரமாக சஞ்சாரம். இதனால் புதிய முயற்சிகளில் புதிய முதலீடுகளில் மிக்க கவனம் தேவை. தந்தையுடன் கருத்து வேறுபாட்டை தவிர்த்தல் நலம். குடும்பத்தில் குதர்க்கமான வாக்கு வாதம் தவிர்த்தல் மிகவும் நன்று.

**நட்சத்திரப் பலன்**

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள் :** உமது நட்சத்திர அதிபதி செவ்வாய். 8, 9க்குடைய சனிபகவான் 6இல், 11-க்குடைய செவ்வாய சாரத்தில் சஞ்சாரம் செய்வதால் நல்லதே நிகழும். இதனால் புதிய முயற்சிகளில் அனுகூலமான பதில் கிட்டும். சகோதர வழியில் பகை விலகும். இஸ்திர சொத்துக்களில் வில்லங்கம் தீரும்.

**திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு :** உமது நட்சத்திர அதிபதி ராகு. அவர் சனிபகவானுக்கு நட்பு கிரகம். இதனால் உமது ராசிக்கு சனிபகவான் எதிர்பாராத நற்பலன்களையே வழங்குவார். மின்சாரம், போக்குவரத்து, கணனி, தகவல் தொடர்பு போன்ற துறையில் சிறப்பு பெற முடியும்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்களில் பிறந்தவர்கட்கு:** உமது நட்சத்திர நாயகன் குரு பகவான், இவர் சனிபகவானிற்கு நட்புநிலைதான். இதனால் திருமணம் கூடும். புத்திர பாக்கியம் கிட்டும். கறுத்த மனிதரால் பணஉதவி கிட்டும். செல்வந்தர்கள் உயர் பதவியில் உள்ளோரின் நட்பு கிட்டும்.

**தாராபலன்**

**மிருகசீரிடம் 3, 4 பாதங்களில் பிறந்தவர்கட்கு :** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனிபகவான் ஜெண்ம தாரையில் சஞ்சாரம் செய்வதால் உடல் நலனில் மிக்க கவனம் தேவை. கடன், கொடுக்கல் வாங்கலில் சரியான கணக்கை பராமரிப்பது நலம். திட்டமிட்டு பணி செய்க.

11.07.2003 முதல் 06.01.2004 வரை மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் சம்பத்து தாரையில் சஞ்சரிப்பதால் சரளமான பணப்புழக்கம் உணடு. எதிர்பாராத தனவரவுக்கு இடமுண்டு. போட்டி, பந்தையம் போன்ற விஷயங்கள் நன்மை தரும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் விபத்து தாரையில் சஞ்சரிப்பதால் போக்குவரத்தில் கவனம் தேவை. பணம் கையாளும் பணியில் இருப்பவர்கள் மிக்க கவனமுடன் இருப்பது நலம். உத்தியோக பிரிவினர் உயர் அதிகாரிகளிடம் வீண் வாக்குவாதம் தவிர்த்தல் நலம்.

**திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு :** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனிபகவான் பரம மைத்ர தாரையில் சஞ்சரிப்பதால் அதிக சுபம் நிகழ வாய்ப்பு உள்ளது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் வாங்க இடமுண்டு. மேலும் சகோதர வழியில் ஒத்துழைப்பு கிட்டும்.

11.07.2003 முதல் 06.01.2004 வரை மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ஜென்மதாரையில் சஞ்சாரம் செய்வதால் உடல் நலனில் கவனம் தேவை. மின்சாதனங்களை கையாள்வதில் எச்சரிக்கை தேவை. வாகனங்களை கவனமாக ஓட்டுவது நலம்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் சம்பதது்த் தாரையில் சஞ்சரிப்பதால் சரளமான பணப்புழக்கம் உண்டு. எதிர் பாராத பணவரவுக்கும் இடமுண்டு. செய்தொழில் உயர்வு கிட்டும். சில பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் பெறுவர்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்களில் பிறந்தவர்கட்கு :** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனிபகவான் மைத்ரதாரையில் சஞ்சாரம செய்வதால் எண்ணம் ஈடேறும். அரசியல் செல்வாக்கு கூடும். வியாபாரம் சிறப்படைய இடமுண்டு. வீடு, மனை அமையும் யோகம் உண்டு. சகோதர வழியில் சுபசெலவுகள் வரும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் பரம மைத்ரதாரையில் சஞ்சாரம் செயவதால் விதவை, மாதரால் அனுகூலம் உண்டு. வரவேண்டிய பாக்கிகள் வசூல் ஆகும். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிட்டும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் ஜென்ம தாரையல் சஞ்சரிப்பதால் உடல் நலனில் கவனம் தேவை. புதிய முயற்சி எடுக்கும போது மிகுந்த எச்சரிக்கை தேவை. பெரியவர்கள் ஆசியைப் பெறுவது நலம். குரு ஸ்தானத்தில் உள்ளவர்களிடம் நல்லாசி வேண்டிப்பெறுவது நலம்.

உமது ராசிக்கு சனிபகவான் 8, 9க்கு உடையவர். அவர் ஜென்ம ராசியில் சஞ்சாரம். குருபகவான் 2,3,4,5 ஆகிய வீடுகளில் சஞ்சாரம. ராகுபாகவனுக்கு 12, 11,10,9 ஆகிய வீடுகளில் சஞ்சாரம். கேது பகவான் 6,5,4,3 ஆகிய வீடுகளில் சஞ்சாரம்.

பிரதி சனிக்கிழமை சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுக. "காகத்வஜாய வித்மஹே கட்கஹஸ்தாய தீமஹி தன்னோ மந்த பிரஜோதயாது" என்று தினசரி 108 முறை சொல்லவும். பிரதோஷ காலததில் சிவாலய தரிசனம் செய்க. லிங்காஷ்டகம் பாராயணம் செய்க. பிரதிவியாழன் தட்சிணா மூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றுக. சங்கடஹர சதுர்த்தியில் விநாயகருக்கு அர்ச்சனை செய்க. பிரதி செவ்வாய் ராகு, காலத்தில் துர்க்கைக்கு தீபம் ஏற்றவும். (தொடரும்)

## மாத்துறை மாவட்ட நிவாரணப் பொருட்கள் கையளிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் விநியோகிக்கப்பட்டுவரும் வெள்ளநிவாரணப்பொருள்களின் மாத்தறை மாவட்டத்திற்கான நிவாரணப்பொருட்கள் நேற்று முன்தினம் மாவட்டசெயலகத்தில வைத்து மகிந்த விஜயசேகரிடம் கையளிக்கப்பட்டன.

தமிழீழவிடுதலைப்புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுபபாளர் அன்பரசன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் இந்நிவாரணப் பொருள்களை அமைச்சரிடம கையளித்தனர். (தி)

**தரம் 09 மாணவர்களுக்கான**

**கட்டுரைப் போட்டி**

**பரிசுகள் ரூபா** 750/= 500/= 250/=

**மற்றும் சான்றிதழ்களும்**

**விடயம்** : "தாய் அன்பிற்கு நிகரேது"

**சொற்கள் : 175 - 200 வரை**

கட்டுரைகள் 31.05.2003இற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப்போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும்பத்திரம்**

**கட்டுரைப்போட்டி இல -03**

மாணவர் முழுப்பெயர் :.......................................

பாடசாலை :.......................................

.......................................

கற்கும் தரம் :.......................................

உறுதிப்படுத்துகிறேன்

.......................................

ஆசிரியர்.

# சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பழந்தமிழர் தீதும், நன்றும் பிறர்தர வாரா என்று நம்பினர்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

வாழ்க்கையின் அடிப்படையான மூலதத்துவம்,தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பது. நமது இன்ப துன்ப அனுபவங்களுக்கு நாமே கருத்தா.நாம் முன்பு செய்து வந்த செயல்களின் பயன்களே இப்பிறப்பில் அனுபவிப்பவைகள்.பிறர் வெறும் கருவிகள்.துன்ப அனுபவ காலத்தில் பிறரை நோவது எய்தவன் இருக்க அம்பை நோவதாகும். தானே அனுபவ கர்த்தா.பழைய சங்க நூலாகிய புறநானூற்றில் மிக மிக முக்கியமானதொரு பாடல்,'யாதும் ஊரே! யாவரும் கேளீர்' என்று தொடங்கும் பாடல்.அப்பாடலின் இரண்டாம்அடி 'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்ற அடி.இவ்வடிதான் முக்கிய பொருள் பொதிந்த பல்லவி.இப்பல்லவி கைவந்த அனுபவஸ்தர்களுக்குத் தான் 'யாதும் ஊர்.யாவரும் கேளீர்' அல்லாதவர்கள் 'யாதும் ஊரே, யாவரும்கேளீர்' என்று சொல்லுவது பயனற்ற வேறும் சொன்மாத்திரையேயாம்.தான் செயற்பாலது 'தன் நண்மையின பொருட்டு ஒருவன் பிறர்க்குத்துன்பம் விளையாதிருப்பானாக' என்கின்றார். வள்ளுவர் இப்போதனை 'தன்னைத்தான் காதலன்' என்ற குறள் மூலம் ஒவ்வொருவரும் தினந்தோறும்தவறாது சிந்திக்கற்பாலதாம்.

## துன்புறுத்துவோருக்குப் பரிகாரமில்லை

துன்புறுத்துவோன் நிலை மேலேசொல்லப்பட்டது.துன்புறுவோன் நிலையிலும் துன்புறுத்துவோன் நிலை படுமோசமானது. அப்பொழுதைகது இனிப்பது போற் காட்டி அவனைக் கொடு நரகுக்குஆளாக்கியே தீரும்.பிற உயிரை வருத்துவதற்கு எவனுக்கும் அதிகாரம் இல்லை. ஒருவனுக்குத் தனக்குக் கிடைத்த உடலை அழித்தற்கே அதிகாரமில்லை.

## தவப்பயன்

தவத்தைப்பெருக்கி எங்குமாய் - எல்லாஉயிர்களிலும் கலந்துள்ள திருவருளை அணுக அணுக,நாம் திருவருளை அணுகியதன் அளவாகச் சுற்றாடலும் அமையும்.

1) பகைவனும் நண்பன் ஆவான்.
2) அறிவிலியும் உபகாரியாவான்.
3) முனிவர்கள் திருவருளில் முழுகித் திளைப்பவர்கள்.அவர் காடுகளில் ஆயுதம் வைத்திருப்பதில்லை. புலிகள் அவர்களுக்கு ஏவல் செய்யும்,மரங்கள் தலை வளைந்து கனிகள் கொடுக்கும்.அவர்களது அருட் பார்வை இருந்தவாறு!

## சம்பாத்தியம்

1)மனத்தை வஞ்சகம் கொள்ளை கொள்ளாமல் சதா சுத்தி செய்து கொண்டிருக்கவேண்டும். 2) தருமத்தை விசாரிக்க வேண்டும். 3)நீதியை தேட வேண்டும்.இந்த மூன்றும் கடவுள் உறையும் இடங்கள்.

துன்புறுவோன் நிலை, துன்புறுத்துவோனின் நிலை,சுற்றாடலின் அமைவு,சம்பாத்தியம்என நாற்கூறு செய்து காட்டியவை உயர்ந்த கருத்துக்கள்.தான் செயற்பாலதை முதற்கூற்றில் அடக்குக. முதலாவது தவிர ஏனையவை பெரும்பாலும் வள்ளுவர் கருத்துக்கள்.வள்ளுவர் சங்கத்தாரால் பெரிதும் பாராட்டப் படடவர்.இச்சந்தர்ப்பத்தில் சங்கம் பற்றிச் சிறிதாயினும் சிந்திப்பது பொருத்தம்.

## சங்கம் தோன்றிடக் காரணம்

பத்தாயிரம் வருடங்களுக்கு முன் சேர,சோழர்களின் அனுசரணை யோடு, பாண்டியர்கள் சங்கம் நிறுவித் தமிழைப்பேணும் நிலை நேர்ந்தது. ஏழாயிரம் வருடங்களுக்கு முந்தியதாகிய தொல்காப்பியத்தில் 'பொய்யும் வழுவுந்தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்றொரு சூத்திரம் உண்டு.இதனால் சங்கம் தோனறிய காரணம் ஊகிக்கத்தக்கது. வழுக்கள் தோன்றும் காலத்தில் கட்டுப்பாடு தோன்றுவது இயற்கை. அறம், பொருள்,இன்பம்,வீடு ஆகிய புருஷாரத்தங்களுக்குப் பிறழ்வு உண்டாகாமல் நூல்கள் தோன்ற வேண்டும். பயன் தரும் நூல்கள் வெளி வருவதற்குப்பாதுகாப்பாக நிறுவப்பட்டது தமிழ்ச்சங்கம்.

## சங்கம்மூன்றாயது

கடல் கோள்களினால் இடையீடுபட்டு தலை ,இடை,கடை,என மூன்றாயது சங்கம். சங்கத்தில் நிரந்தரமாயிருக்கும்புலவர்கள் புருஷார்த்தம் கைவந்தவர்கள்.'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்பது வள்ளுவர்வாக்கு. சங்கப்புலவர்கள் மனமாசு நீங்கி அறங்கைவந்தவர்கள்.பொருள்,இன்பம்,வீடு என்பவற்றின் வரிசைக்கிரமம் அறிந்தவர்கள். அவர்கள் சான்றோர்கள். வடமொழி வேதம் வல்லவர்கள். அக்காலத்தில ஒருவர் நூல் செய்தால் அதனைச் சங்கம்அங்கீகாரிக கவேண்டும். சங்கம் அங்கீகரிக்காத நூல் பயன்படுவதில்லை.

## அகத்தியர்

தலை,இடைச்சங்கங்களில் இருந்தவர் அகத்தியர்.அவர் வேதம் வல்ல மகா முனிவர். முத்தமிழ் இலக்கணம செய்தவர்.அவர் மாணவரே தொல்காப்பியர்.இவர்களெல்லாம் அறிவறிந்த மகான்கள்.காரியத்தை அறிவது வேறு.அறிந்ததில் நிலைப்பது வேறு.அறிந்த உண்மைகளில் நிலைத்தற்குச் செய்த அன்புச் சாதகமே தமிழ். இக்கருத்து ,தொல்காப்பியம் பொருளதிகாரத்தாலும் அன்பினைந் திணை பேசும் இறையனாரகப் பொருளினாலும் அறியத்தக்கது. காலம் செல்லச் செல்லப் பொய்யும்,வழுவும் அதிகரித்தன. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுகக்கு முன்னமே சங்கத்தின கட்டுப்பாட்டுக்கு அடங்காத நிலை நேர்ந்தது.

## ஒடுங்கிய காரணம்

சத்திய யுகங்களில் எப்படிச் சங்கம் என ஒன்று வேண்டாதிருந்ததோ, அவவாறே அகத்தியம் மிக்க காலத்திலும் சங்கம் என ஒன்று வேண்டியதில்லையாயிற்று.அதனால் கடைச்சங்கம் தானே ஒடுங்கியது.

## ஒடுங்கியதன் பின் விளைவு

சங்கம் ஒடுங்கி பின் தோன்றிய நூல்களை தமிழ் என்று சங்கம் அங்கீகரிக்குமா என்பது பெரிதும் விசாரஞ் செய்யற்பாலது. கடைச்சங்கத்தை அடுத்துச் சமண வித்துவான்களின் ஆதிக்கம் உச்ச நிலை எய்தியது.எவரையும் வசீகரிக்கத் தக்க வகையில் நிகண்டு, நன்னூல் முதலிய கருவி நூல்களும்,சீவக சிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களும், சிறு காப்பியங்களும் எழுந்தன. சிந்தாமணி கற்றோரைக் கொள்ளை கொண்டது. சிலப்பதிகாரம் கற்றோர் மற்றோர் யாவரையும் கொள்ளை கொண்டு தலை தூக்கியது.

சமண,பெளத்த காப்பியங்கள் அனைத்துக்கும் ஒப்புயர்வற்ற ஏகப்பிரதிநிதி சிலப்பதிகாரம் என்று கொள்ளலாம்.அதனைச் சங்கக் கண் கொண்டு சிறிது நோக்குவோமாக. சிலப்பதிகாரக் கதாநாயகி கண்ணகி.சிலப்பதிகாரஞ் செய்தவர் இளங்கோ.செங்குட்டுவன் இளங்கோவின் தமையன்.அவன் கண்ணகியை அங்கீகரிக்கவில்லை. கண்ணகியைச் செயிரொடுவந்த சேயிழை என்கின்றான். 'செயிர்' மோசமான அடை.இங்கே சினம் என்ற பொருளில் வந்தது.பாண்டிமாதேவியை, 'உயிரொடு சென்ற ஒரு மகள்' என்று உயர்த்திக் கூறுகின்றான். பாண்டியன் நீதியை 'வல்வினை வளைத்த கோலைச் செல்லுயிர் நீத்துச் செங்கோலாக்கியது' என்று பாராட்டுகிறான். பாண்டியனே பாட்டுடைத் தலைவன் ஆதற்குரியவன் என்பது செங்குட்டுவன் கருத்தால் தெளிவு.

ஒரு சமயம் பழிக்கஞ்சி உயிர் நீத்துப புகழ்ச் சோழர் நாயனார் ஆயினார்.அவரில் எல்லாவற்றாலும் குறைந்தவனேயல்லன் பழிக்கஞ்சி உயிர் நீத்து நீதியைப் பேணிய இப் பாண்டியன்.'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்மனை நல் விருந்தாயினான் என்பது தெய்வக்கண்ணகி கூற்று. தமையன் மூலமும்,தெய்வக்கண்ணகி மூலமும் பாண்டியன் பெருமையை வெளிப்படுத்த முயன்ற இளங்கோ செயிர் முற்றிய கண்ணகிக்குக் காப்பியம் செய்த காரணம் என்ன?

கர்நாடக சங்கீத வித்துவான்களுக்கு இராக ஆலாபனையே முக்கியம். அது கைவந்தால் அதனைக் காட்டுதற்கு ஏதுமொரு பாடல் தேவை.இளங்கோவிடம் எவரையும் வசீகரிக்கவல்ல அழகான திணைப் பாடலகள் உண்டு. திணைப்பாடல் கைவநதவர் இளங்கோ. அப் பாடல்களைக் காட்டுதற்கு அவருக்கு வாய்ப்பாயிருந்தது கண்ணகி கதை.கர்நாடக சங்கீதகாரருக்குச் சாகித்தியத்தில் கருத்தில்லை. அவ்வாறே இளங்கோவிற்கு கதாநாயகியிற் கருத்து இல்லை.

மணமக்களின் அலங்கார மண்டபம் போன்றது சிலப்பதிகாரம். உரியான உயிர்ப்பொருளைப் பேணாத இதனைத் தமிழ் என்று சங்கம் ஏற்றுக்கொள்ளுமா? சிந்திக்குக. நெஞ்சை அள்ளுவது கண்ணகி கோவலர் கதையா? திணைப்பாடல்களா?காமஞ்செப்பாது கணடது மொழிமோ. □

---

### அளவெட்டியில் சிகை அலங்காரமும் ஒப்பனையும்

(அளவெட்டி)

முறைசாராக்கல்விப் பிரிவின் கீழ் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 'சிகை அலங்காரமும், ஒப்பனையும்' பாடநெறிக்கான விண்ணப்பம்கோரப்படுகிறது.

இப்பாட நெறி ஆறுமாத காலத்தைக கொண்டதாகும். தகுதியானவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை 28.5.2003 ற்கு முனனர் அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இப்பாட நெறி முற்றிலும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. (க-83)

### ஊடகவியலாளர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊடகவியலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கந்தர்மடத்திலுள்ள இலக்கம் 284ல்அமைந்துள்ள தனியார் மருத்துவமனை வளாகத்தில் சங்கத்தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் மதியம் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளது. (க-43)

### அவுஸ்திரேலிய அமைச்சர் இலங்கையில்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் இலங்கைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இன்று தங்கியிருப்பார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாடொன்றிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இவர்,இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கி விட்டு மீண்டும் புறப்படுவார் எனவும் ,

அச்சமயம் இலங்கை வெளிவிவகார அமைச்சின் உதவி அமைச்சர் லால் தர்மபிரிய சந்தித்துப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(க-10)

### பொதுக்கூட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு சங்கத்தலைவர் கு. கந்தசாமி தலைமையில் மகாஜன சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-83)

---

## புலிகளின் இடைக்கால நிர்வாக சபையை லங்கா சமசமாஜக் கட்சியும் நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்னவைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை லங்கா சமசமாஜக் கட்சியும் நிராகரித்துள்ளது.

அக்கட்சியின் செயலாளர் நாயகம் பட்டி வீரக்கோன் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் தற்காலிகமாகவே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் தாம் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாக சர்வதேச நாடுகளுக்கு வலியுறுத்த முனைந்து வருகின்றனர்.

ஜனநாயகத்தில் அவ்வியக்கம் கலந்துகொள்ளவில்லையென்பது அவர்களிடம் உள்ள ஆயுதங்களின் மூலமே தெளிவாகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதக்குழுக்களாக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும்வரை அவர்களிடம் இடைக்கால நிர்வாக சபை அமைப்பை வழங்கக் கூடாது.

இடைக்கால நிர்வாக சபை மட்டுமனறி எந்தவிதமான நிர்வாக அமைப்புக்களையும் அவர்களிடம் வழங்கக்கூடாது.

டோக்கியோ மாநாட்டில் கிடைக்கவுள்ள நிதி உதவிகள் மூலம், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புனரமைப்புப் பணிகளின் அமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் கொண்டிராது ஏனைய கட்சிகளும் அவ் அமைப்பில் உளளடக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் அப்பிரதேச புனரமைப்புக்களில் ஏற்படும் குறை நிறைகளை ஏனைய கட்சிகளும் கண்டறிய முடியும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (தி)

## வெள்ள அனர்த்தங்களினால் ஒரு இலட்சம் மாணவர்களின் கல்வி நடவழக்கை பாதிப்பு

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்துக்கு அதிகமான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கபட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

காலி,மாத்தறை ஆகிய இரு மாவட்டங்களிம் 50ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களுக்கும் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதால்,அப்பிரதேசங்களில் கல்வி நடவடிக்கை களை உடனடியாக ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், மாணவர்களின் நனமையை கருத்தில் கொண்டு கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் — முக்கிய விடயங்களை அமுல்படுத்தத் திட்டம்

### ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமான முக்கிய உடன்பாடுகளை செயற்படுத்தும் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தவேண்டும் என்றும், சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கையை வளர்க்க வேண்டுமெனவும் செப்டம்பர் 2002ஆம்ஆண்டு ஐரோப்பியஆணைக்குழு வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

யுத்தகாலத்தில் சேதமடைந்த பாடசாலைகளைப் புனருத்தாரணம் செய்வது இந் நடவடிக்கைகளுள் ஒன்றாகும். இதன்படி பாடசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் கண்ணிவெடிகளை அகற்றி சிதைந்து போன கட்டடங்களைச் சீராககி வாங்கு,மேசை போன்ற அடிப்படை வசதிகளையும்செய்து கொடுப்பது என்பன இதனுள்ளடங்கும்.

யாழ்ப்பாணத்திலுள்ள 5 கல்விக கோட்டங்களில் 55 பாடசாலைகள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியிருக்கின்றது.

இவ்வேலைகளில் 11உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் ஈடுபடுவார்கள். இரண்டு கிழமைகளுக்கு முன்பே இவ் வேலைகள் ஆரம்பித்து விட்டன. 4மாதங்களுக்கு வேலைகள் நீடிக்கும் என்றும் மேற்படி வேலைகள் தளபாடங்கள் ஆகியவற்றின் மொத்த வலை600.00யூறோக்களாகும் என்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (க)

## தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி அரசியல்வாதிகளுடன் பேசுவதை விட மதபீடங்களுடன் பேசுவது சிறந்தது

### போம்புவல மங்கடல விகாராதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்களின் உரிமை பற்றி சுய இலாபத்திற்காக செயற்படும் அரசியல் வாதிகளிடம்பேசுவதை விட மதஸ்தாபனங்களுடன் பேசி அவற்றின் உதவியுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது சிறந்தது என களுத்துறை மாவட்ட போம்புவல மங்கடல விகாராதிபதி அல்வத்துரே அஸ்வஜிதேரர் கூறியுள்ளார்.

களுத்துறையில் வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிப்படைந்த மக்களுக்கென தமிழீழ விடுதலைப் புலிகளினால வழங்கப்பட்ட நிவாரணப் பொருடகளைப் பெற்றுக் கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில் ,பாதிக்கப்பட்டமக்களுக்கு உதவுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் விடுத்த வேண்டு கோளிற்கு அமைய அவர்கள் எமக்கு நிவாரணப் பொதிகளை வழங்கியுள்ளனர்.

அத்துடன, எம்முடன் புலிகள் எந்த வித பகையுணர்வுடனும் பழகாது மிகவும் அன்னியோன்னியமாக கலநதுரையாடினார்கள்.மிகவும் பாதிக்கப்பட்டு வேதனைக்குள்ளான மக்களுக்கு [illegible] கூறினார்கள்.

இத்தனை வருடங்களும் சிங்கள மக்களின் பகைவராக தவறாக கருதப்பட்ட விடுதலைப்புலிகள் இன்று எமது உற்ற நண்பர்களாகி விட்டனர். இதற்கு அவர்களின் தலைவர் வே.பிரபாகரனிற்கே நன்றி கூற வேண்டும்.

அத்துடன்,நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் அரசியல் வாதிகளை மட்டும் இணைத்துக்கொள்ளாது மக்களுடன் ஒன்றிணைந்து வாழுகின்ற மதத்தலைவர்களையும் இணைததுக் கொள்ள வேண்டும் என்றார். (க-10)

## இன்று ஒரு தகவல்

# மந்திரமா? தந்திரமா?

எனக்கு வேண்டிய ஒருவர் சீரியஸ் ஆகவே, என்னிடம் ஒரு யோசனை கேட்டார். "ஏன்சார், சுலபமாகச் சம்பாதிப்பதற்கு வழி என்ன என்று நானும் பல நாட்கள் யோசித்துப் பார்த்து விட்டுத்தான், இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்" என்றார். "என்னமுடிவு அது?" என்று விசாரித்தேன். "எனக்குத் தெய்வீக அருள் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொள்ள வேண்டியது. ஜனங்கள் தேடிவருவார்கள். அவர்களிடம் ஏதாவது வாங்கிக்கொண்டு அருள் வாக்குச் சொல்லவேண்டியது. எப்படி இந்தத்திட்டம்? என்றார். "இந்தக்காலத்தில் ஜனங்கள் அவ்வளவு சுலபமாக உங்களை நம்பிவிடுவார்களா?" என்றேன்.

"ஏன் நம்பமாட்டார்கள். அதற்கும் கைவசம் சில மந்திரங்கள் கற்று வைத்திருக்கிறேன். அதிசயங்களையும் அற்புதங்களையும் பண்ணிக்காட்டினால் சுலபமாகக் கூட்டம் சேர்ந்துவிடும்" என்றார்.

"அது என்ன மந்திரம்?" என்று விசாரித்தேன். "மந்திரங்கள் ஒன்றுமில்லை. எல்லாம் தந்திரம் தான்" என்று சொல்லி என்னிடம் சில விபரங்களைச் சொன்னார். அவற்றை இப்பொழுது உங்கள் காதிலும் போட்டு வைத்து விடுகிறேன். ஏனென்றால், எனக்கு வேண்டிய அந்த நபர் மாதிரி சிலர், உங்கள் ஊருக்கும் வரலாம். அப்படி வந்தால் நீங்கள் ஏமாந்து போகாமல் இருக்க வேண்டும் அல்லவா? அதற்காகவே சொல்லுகின்றேன்.

சிலர் என்ன பண்ணுவார்கள் தெரியுமா? உங்கள் ஊருக்கு வருவார்கள். ஏதாவது ஓர் இடத்தில் உட்கார்ந்து மந்திரம் பண்ணுவார்கள். பூமிக்குள்ளே இருந்து கடவுள் வரப்போகிறார். அவரை வரவழைக்கிற மந்திரம் தான் இப்பொழுது நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்பார்கள். ஜனங்கள் சுற்றிநின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்கள். நிஜமாகவே, அந்த இடத்தில் பூமி லேசாக வெடிக்க ஆரம்பிக்கும். உள்ளே இருந்து ஒரு சிலை வெளியே வர ஆரம்பிக்கும். உடனே இவரின் காலில் விழுந்து எல்லோரும் கும்பிடுவார்கள். இதை எப்படி செய்கிறார்கள் தெரியுமா? சுண்டல் கடலை இருக்கிறதல்லவா? அதை ஊறவைக்க வேண்டும். முதல் நாள் இரவே, யாருக்கும் தெரியாமல் அந்த இடத்தில் குழியைத்தோண்டி ஊறவைத்த சுண்டல் கடலையை தேவையான அளவுக்குக் கொட்டி அதில் சிறியதாக ஒரு சாமி சிலையை வைத்து மண்ணைப் போட்டு மூடிவைத்து விடவேண்டும். மறுநாள் காலையில் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு போய் அந்த இடத்தில் உட்கார்ந்து மந்திரம் பண்ண வேண்டும். ஊறவைத்த கடலை முளைக்க ஆரம்பிப்பதனால் அந்த இடம் லேசாக வெடிக்க ஆரம்பிக்கும். சாமி சிலை வெளியே வரும். இது தான் அதில் உள்ள தந்திரம்.

வெறும் கையில் வீபூதி வரவழைப்பது எப்படி தெரியுமா? வடிக்கிற கைஞ்சியில் விபூதியைக் கலந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் காயவைக்க வேண்டும். அதில் ஒரு உருண்டையை எடுத்து விரல் இடுக்கில் சுலபமாக மறைத்து வைத்துக் கொள்ளலாம். பக்தர்கள் கையை நீட்டும் போது இந்த உருண்டையை விரல் நுனிக்கு கொண்டுவந்து உதிர்த்து விடலாம். உருண்டை சிறிதாகத் தெரிந்தாலும் விபூதி நிறைய வரும். சில படங்களில் சட்டத்தில் லாக்டிக் அமிலத்தை தெளித்து வைத்து விட்டால் காற்றிலே உள்ள ஈரத்தால் சாம்பல் உருவாகும். அப்படி உருவாகிற சாம்பல் விபூதியாகக் கொட்டும்.

சிலர் நெருப்பு இல்லாமல் தீயை உண்டாக்குவார்கள். அது எப்படியென்றால், பொட்டாசியம் பர்மாங்கனேற் துகள்களை போட்டுவிட்டு, அதன்மேல் கிளிசரினை ஊற்றினால் போதும், நெருப்பு இல்லாமல் அது எரியும்! சிலர், தாம் சமாதி நிலையில் இருப்பதாகவும் அந்தச் சமயம் நாடித்துடிப்புக்கூட இருக்காது என்றும் சொல்லுவார்கள். டாக்டர்களும் சோதித்துப் பார்த்துவிட்டு அது சரிதான் என்று சொல்லுவார்கள். இது எப்படி என்றால் பாட்டரி மாதிரிக் கடினமான பொருளைக் கக்கத்திலே வைத்து அழுத்திக்கொண்டால் போதும். மணிக்கட்டில் நாடித்துடிப்பு தெரியாது. இப்படி நிறையத் தந்திரங்கள் எல்லாம் மந்திரம் என்கின்ற பெயரில் செல்லுபடி ஆகிக்கொண்டிருக்கிறது. அசல் எது, போலிஎது என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். அறிவு பூர்வமான ஆன்மீக உணர்வு தான் மக்களை மேம்படுத்தும்.

ஓர் ஊரில் ஒரு சாமியார் சீட்டுவிற்றுக்கொண்டிருந்தார். என்ன சீட்டு அது என்று விசாரித்தார்கள். "இதில் ஒரு சீட்டு வாங்கினால் போதும் இதுவரையும் நீங்கள் செய்த பாவங்கள் போய்விடும். விலை ரூபா நூறு ரூபா என்றார். ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டு போய் ஆளுக்கு ஒன்று வாங்கிக்கொண்டு போனார்கள். அதில் ஒருவன் மட்டும் 200 ரூபா கொடுத்து எனக்கு இரண்டு சீட்டு கொடுங்கள் என்று வாங்கிக்கொண்டு போய் விட்டான்.

எல்லாச் சீட்டுக்களையும் விற்ற பிறகு அந்தச் சாமியார் தனியாக ஒரு மண்டபத்தில், போய் உட்கார்ந்து வசூல் எவ்வளவு என்று எண்ணிப்பார்த்தார். 10,000 ரூபாய்க்கு மேலே இருந்தது. அதை மூட்டையாகக்கட்டி தோளில் போட்டுக் கொண்டார். இருட்டிவிட்டது. ஒரு காட்டு வழியாக அடுத்த ஊருக்குப்போய்க் கொண்டிருந்தார். வழியில் திடீரென்று ஒரு திருடன் வந்து நின்று வழிமறித்தான். கத்தியைக் காட்டினான். இருப்பவை எல்லாவற்றையும் கொடு என்று பணமூட்டையைப் பறித்துக்கொண்டான்.

சாமியார் பதறினார். "இது மகா பாவம் தெரியுமா உனக்கு?" என்றார். "தெரியும் அதற்காகத்தான் அப்போதே உன்னிடம் 200 ரூபா கொடுத்து இரண்டு சீட்டுக்கள் வாங்கிக்கொண்டேன். அது நான்தான்" என்றான். "என்னப்பா சொல்கிறாய்?" என்றார் இவர் விபரம் புரியாமல்!

"இதுவரையும் நான் கொள்ளையடித்த பாவம் தீர்வதற்கு ஒரு சீட்டு. இப்பொழுது உன்னிடம் கொள்ளையடிக்கிறேனே இந்த பாவம் தொலைய இன்னொரு சீட்டு! அதுதான் முன்னெச்சரிக்கையாக இரண்டு சீட்டுக்கள் வாங்கிக்கொண்டேன்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஸ்ரீ.ல.சு.கட்சி - ம.வி.முன்னணி அடுத்தமாதம் ஒப்பந்தம் கைச்சாத்து

## பொ.ஐ.முன்னணி பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான பேச்சுக்கள் இப்போதும் தொடர்ந்து இடம்பெறுகின்றன. அடுத்தமாத முற்பகுதியில் புரிநதுணர்வு ஒப்பந்தம் ஒப்பமிடக் கூடியதாக இருக்கும். அதன் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏனைய கட்சிகளுக்கு அவ்ஒப்பந்த விடயங்கள் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொது செயலர் டீ. எம். ஜயரத்தன ஆங்கில பத்திரிகை ஒன்றிற்கு தகவல் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இப்பொழுது ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு 113 எம்.பிக்களின் ஆதரவே உள்ளது. கடந்த தேர்தலில் சில போதிய ஆசனங்களை அது பெற்றதால்த்தான் இந்தளவு ஆசனங்களையாவது அது பெறமுடிந்தது. இரண்டு மூனறு கட்சிகள் இணைந்து கூட்டாக போட்டியிடுவதால் "போனஸ்" ஆசனங்கள் கிடைக்க முடியும். நாம் ஜே.வி.பியுடன் கூட்டிணைவதற்கு இதுவே காரணம்.

அரசும், புலிகளும் வடக்கு கிழக்கின் உட்கட்டமைப்பு பணிகள பற்றி பேசி வருகின்றன. இது எவர் பணி? அரசு மேற்கொள்ள வேண்டிய பணி. அழிந்துபோன ஒரு நகரத்தையோ, 20 ஆண்டு கால யுத்தத்தில் அழிந்து போன வடக்கு கிழக்கையோ புனர்நிர்மாணம் செய்யவேண்டியது அரசின பொறுப்பு. இது பற்றி ஜப்பானும் ஏனைய நாடுகளும் எதற்காக பேசவேண்டும். இதனை எம்மால் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. அதிகாரப் பரவலாக்கம் பறறிய விடயங்களை அரசாங்கம் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறது.

2000 ஆம் ஒகஸ்ட் அதிகாரப் பரவலாக்கல் வரைபை இன்றும் ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எமக்குள் இது தொடர்பாக ஒரு உடன்பாடு ஏற்படுமென்றே நாம் நம்புகிறோம். இதற்காக இனப்பிரச்சினை தொடர்பான எமது நிலைப்பாட்டை நாம் மாற்ற மாட்டோம். சமஷ்டி முறையை முதலில் ஆதரித்தவர்கள் நாமே. இம்முறையில் நாம் இன்றும் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். ஜே.வி.பியும் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர், பாராளுமன்றமும் கலைக்கப்படலாமா என்று பலர் கேட்கிறார்கள். அவ்வாறு இல்லை. லொத்தர்சபையை அரசாங்கம் நோர்வே நாட்டிற்கு விற்பதை தடுப்பதற்கு ஜனாதிபதி அதனை பொறுப்பேற்றார். லொத்தர் சபையை நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் வைத்திருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா என்றும் தெரிவித்தார். (க)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்கைக்கு அமைச்சர் இம்தியாஸ் பாராட்டு

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நிவாரணப் பொருள்களை வழங்கியமையை மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பாராட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சர்வோதய அமைப்பின் 45வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அவர் இப்பாராட்டினைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், கடந்த 20 வருடங்களாக யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகள், தென்னிலங்கை மக்களுக்கு உதவும் வகையில் செயற்படும் இன்றைய சூழ்நிலைக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசே காரணம்.

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து இலங்கையின் நலனுக்கும், நாட்டு மக்களுக்கும் உதவும் ஓர் அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் மாறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இத்தகைய நடவடிக்கைகள் அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டமையை காட்டுகிறது.

இதனடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் இடைநிறுத்தி வைக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.



அபபோது தான் நாட்டில் மேலும் சுபீட்சமும், அமைதியும் ஏற்படுவதுடன இனவாதசக்திகளின் ஆதிக்கமும் குறையும் என்றார். (தி)

## இராசி பலன்

26.05.2003

(வைகாசி 12, திங்கள்)

ஏகாதசி பி.இ. 2.40 வரை
உத்தரட்டாதி பி.இ. 1.40 வரை
இராகுகாலம் 7.22 - 8.52
சுபநேரம் 11.52 - 1.22

ஏகாதசி விரதம்

**மேடம்**
காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, பணத்தட்டுபாடு, பிதா சிந்தை

**இடபம்**
நண்பர் சந்திப்பு, தொழில் சிந்தை, பெருமையடைதல், காரிய அனுகூலம்

**மிதுனம்**
செய்தொழில் விருத்தி, சுபநிகழ்வு, உற்சாகம், முயற்சிகைகூடும்

**கடகம்**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், உடல் உழைப்பு, வீண்பயம், புதிய திருப்பம்

**சிங்கம்**
எதிர்பாராத அச்சம், நிலைமாற்றம், வாகன பயம், காரிய தடங்கல்,

**கன்னி**
பொருள் சேர்க்கை, நல்லவருவேற்பு, வாகனசுகம், உடல்நலம்

**துலாம்**
சத்துருஜெயம், நல்லவருமானம், திடீர்பயணம், காரிய அனுகூலம்

**விருச்சிகம்**
வியாபார நன்மை, மனச்சஞ்சலம், பிரயாண தடங்கல், குடும்பக்கவலை,

**தனுசு**
கல்வியில் ஆர்வம், மாதா சுகம், தொழில்விருத்தி, கடும் வார்த்தை

**மகரம்**
வாக்குமேன்மை, இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, தனவரவு

**கும்பம்**
மாதர் நட்பு, கௌரவக்குறைவு, பணவிரயம், போசனசுகம்

**மீனம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சகோதரர் உதவி, புதியபொருள் சேர்க்கை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## இந்திய - இலங்கை சேது சமுத்திரத்திட்டம்

# நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையின் கடல் வளம் பாதிப்புறும்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தினை இலகுபடுத்தம் நோக்கில் இந்தியாவின் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படவுள்ள சேது சமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் இலங்கையின் கடல் வளங்கள் அழிந்து போய்விடும் என பல விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி திட்டம் இங்கு அமுல்படுத்தப்படுமானால் இலங்கையில் குறிப்பாக வடகிழக்கு மாகாண பகுதியினை அண்மித்த கடற்பரப்பில் உள்ள பவளப்பாறைகள் அழிந்துவிடுமெனவும், மீன்பிடித்தொழிலை அதிகரிக்கச் செய்யும் தரைஅமைப்பும் இதனால் பாதிப்படைந்துவிடும் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

இதனால், மின்பிடித்தொழில் மிகவும் பாதிப்படையும் எனவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்கள். (க-10)

## கண்டி பெனிதெனிய

# ஆசிரிய கலாசாலை கட்டடத்தில் இருந்த மாணவர்கள் வெளியேறினர்

(கொழும்பு)

பேராதனை பெனிதெனிய ஆசிரியர் கலாசாலைக்கட்டடங்களில் பலாதகாரமாக தங்கியிருந்த பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை அங்கிருந்து வெளியேறி உள்ளனர். நேற்று முன்தினம மாலை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் பல்கலைக்கழகங்களின் நிர்வாகமும் நடத்திய பேச்சு வார்தததைகளை அடுத்து பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை உரியமுறையில்ஏற்படுத்தித்தரக்கோரி 5ஆயிரத்திற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள். பெனிதெனிய ஆசிரியர் கலாசாலைக்கட்டடத்தில் கடந்த வெளளிக்கிழமை இரவு முதல் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆசிரியர் கலாசாலைக் கட்டடத்தில் இருந்து மாணவர்கள் வெளியேறாவிட்டால், அவர்களை வெளியேற்றும் பொருட்டு நீதிமன்ற உத்தரவை தாம பெற்றிருப்பதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் தெரிவித்துளளார். (தி)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்
— குறள்

வலம்புரி

## ஜனாதிபதியின் எச்சரிக்கை

இலங்கையின் இறைமையில் நோர்வே தலையிடுகிறது. இதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரித்துள்ளார். ஜனாதிபதியின் இவ்வெச்சரிக்கை அழைத்த விருந்தினருக்கு அடிகொடுத்து அனுப்புவது போல் அமைகிறது.

இலங்கையின் இன விவகாரத்தில் சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்டு நிரந்தர தீர்வைக காண உதவுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்தது ஜனாதிபதி சந்திரிகாவே. நோர்வேயின் அனுசரணையை இருதரப்பும் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் இலங்கையின் சமாதான முயற்சியில் மனப்பூர்வமாக ஈடுபடுவதற்கு நோர்வே இணங்கிக் கொண்டது. இலங்கை இனவிவகாரத்தில் வலிந்து தலையிடுகின்ற நாடுகள் உள்நோக்கம் கொண்டவையாக இருக்கலாம். ஆனால் நோர்வேக்கு அத்தகையதொரு உள்நோக்கமும் கிடையாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை நோர்வே ஏற்றுக் கொண்டது. பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபோது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான முயற்சியைத் தொடருமாறு நோர்வே அரசிற்கு அழைப்பு விடுத்தார். பிரதமரின் அழைப்பின் போது நோர்வேயில்கூட ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆனால் நோர்வே அரசு பெருந்தன்மையோடு முன்னைய அரசின் சமாதானத் தூதராக இருந்த எரிக் சோல்ஹெய்மையும் சேர்த்து சமாதான முயற்சியினை முன்னெடுத்தது.

உலகில் அமைதி நிலவ வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். மனித உயிர்கள் போர் வெறிக்கு இரையாகக் கூடாதென்ற உயர்ந்த நோக்கிலேயே நோர்வே அரசு இலங்கை இனவிவகாரத்தில் நடுநிலையாளராக செயற்பட முன்வந்தது. இதனை விரும்பாத பௌத்த பிக்குகள் நோர்வேயின் தேசிய கொடியை எரித்தார்கள் ஜனாதிபதி மௌனமாகவே இருந்தார். நோர்வே மக்கள் நினைத்திருந்தால் எமது தேசியக் கொடியை எரிக்கும் அளவில் இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியம் என்ன? என கேள்வி எழுப்பியிருக்க முடியும் ஆனால் அவர்கள் அதைனைச் செய்யவில்லை. அத்தகைய பெருந்தன்மையோடு நோர்வே அரசு நடந்து கொள்ள, ஜனாதிபதி சந்திரிகாவோ, நோர்வே இலங்கையின் இறைமையில் தலையிடுகிறது என எச்சரித்திருப்பது ஒரு நாட்டின தலைவக்கு உரிய பண்பாகாது

# ஐ.தே. முன்னணி அரசின் ஆக்க பூர்வமான முடிவிலேயே

# எமது அடுத்தகட்ட நடவடிக்கை தங்கியுள்ளது

## யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தமானது எமது முழு ஸ்திர நிலையான ஓர் ஆரோக்கியம் மிக்க பலன்களைவழங்கும் வழிகளுக்குரிய முறையாகும.அரசு தரப்பு மேற்கொள்கின்ற முக்கியமான,ஆக்கபூர்வமான முடிவில் தான் எமது அடுத்த கட்ட நடவடிக்கை தங்கியுள்ளது என்பது தமிழ் மக்கள் அனைவரும் அறிந்த விடயமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ. மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் .

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மக்கள் அரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

டோக்கியோ பேச்சுக்களில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு ஏன் எடுத்தார்கள் என்பது குறித்த வினாக்கள் மக்கள் மத்தியில் எழலாம்.

நாங்கள் மேற்கொண்டு வரும் எங்களுடைய விடுதலை உடன்பாட்டை அடுத்து எமது மக்கள் இயல்பு வாழ்க்கை மீளப்பெறுதல் தொடர்பான பேச்சுக்களிலே மிக முக்கியமானதோர் அங்கமான சிரான் என்ற அமைப்பு செயற்படும் என்று இணக்கம் காணப்பட்டது.

வெளிநாட்டு நிதி உதவிகளைக் கையாண்டு செயற்படுவதற்கான அமைப்புக்கு இதுவரை எந்த விதமான அங்கீகாரமும் வழங்கப்படவில்லை.

டோக்கியோ மாநாட்டில் நாம் கலந்து கொள்வதனூடாக வடக்கு கிழக்குப் பகுதிகளின் புனரமைப்புக்கென ஒதுக்கப்படும் நிதி எவ்வாறு எமது மக்களை வந்தடையும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேணடும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதாகக் கூறிக் கொண்டு சந்தோசப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் அந்த உதவி யாருக்குத்தேவையோ அவர்களுக்குக் கிடைக்காத நிலையில் நிறுவனங்களாக இருக்க விரும்பவில்லை.

சமாதான நடவடிக்கைகளும் முற்றுமுழுதாக எமது மக்களுடைய நிரந்தரமான அமைதி வாழ்க்கைக்கு உரியது.எமது மக்களுக்கு இது பிரயோசனமாக அமையும் என கருதுகின்றோம்.

எமது மக்களுடைய இயல்பு வாழ்க்கை அவர்களது அமைதி நிரந்தரமானதாக அமைய வேண்டும் என்பது எங்களது புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் கூறப்பட்ட விடயம்.இவற்றையே நாம் வலியுறுத்தினோம்.

எமது மக்களுக்கும் எமக்கும் வடபகுதியில் ஏற்படக்கூடிய இயல்பு வாழ்க்கையும், நிரந்தர அமைதியும் முழுஅபிவிருத்தியை ஏற்படுத்தும் என்பதனை நீங்கள் எல்லோருமே பொருளாதார ரீதியில் உணர்ந்து கொள்ள முடியும்.

எமது பகுதிகளைப் பொறுத்த வரையில் புரிந்துணர்வு உடன் பாட்டிலே தவறுகளோ அல்லது குழப்பமான நிலைகளோ காணப்படுவதாக யாரும் தெரிவிக்கவில்லை.

எனவே தென்பகுதியிலிருந்து இங்கு இந்த ஆய்வரங்கிற்கு வந்துள்ள பெரியோர்கள் எல்லோருக்கும் நாம் முன்வைக்கும் கருதுகோள் என்னவெனில்,தென்பகுதியிலே இருக்கின்ற சமாதானப்புரிந்துணர்வு ஒப்பந்தகாரர்களுக்கான சந்தேகங்களையும்,நிரந்தர அமைதி தொடர்பான சந்தேகங்களையும்,குழப்பங்களையும் தீர்க்கும் கடமை உங்களிடம் வந்துள்ளதை தெரியபபடுத்த விரும்புகின்றேன்.

எனவே எமது தமிழ் மக்களுடைய வாழ்க்கை முறைகளைப் பற்றி அவர்களால் எமது பிரதேசத்தில் இந்தத்தாயகத்தில் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றியும்,அவர்களது உரிமைகள் பற்றியும் தெளிவாக விளங்க வைப்பதற்கான கடமை உங்களிடம் வந்திருக்கின்றது.

நாங்கள் நிரந்தரமான அமைதியானவாழ்க்கையைப் பெறுவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பவர்கள். இடைக்காலத்தில் ஆயுதம் வைத்திருந்தவர்கள் இன்று மக்களின் நலன் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனா.இவ்வாறான நிகழ்வுகளை இங்கே ஏற்படுத்துவதை விட அவர்கள் மத்தியில் இது பற்றி விளக்குவதே சிறந்தது.

நாங்கள் ஒரு தேசிய இனம். எமது அபிலாஷைகளை ஏனையோர் புரிந்துகொள்ள வேண்டும். வலியுறுத்தி புரியவைக்க வேண்டும். அமைதித்தீர்வுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்றார். (க-8,7)

# தாய்லாந்தை தளமாகப் பயன்படுத்த எந்தவொரு ஆயுதக்குழு வுக்கும் இடமில்லை

## தாய்லாந்து கடற்படைத் தளபதி கொழும்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்து கடற்பிராந்தியத்தை தளமாக வைத்து ஆயுதங்களைக் கடத்தவோ அல்லது அங்கிருந்து கொண்டு அரசாங்கத்தை அச்சுறுத்தவோ எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்களுக்கும் இடமளிக்கப்போவதில்லை என தாய்லாந்தின் கடற்படைத்தளபதி அட்மிரல். தாவிசல் சோமாபா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த இவரை இலங்கை கடற்படைத் தளபதி தயாசுந்த கிரி வரவேற்றார்.

இவ்வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தாய்லாந்திற்கும்-இலங்கைக்கும் இடையில் நீண்டகால வரலாற்றுத்தொடர்புகள் இருந்து வருகின்றன.இத்தொடர்புகளுக்கு பங்கம் ஏற்படாதவகையில் இரு நாட்டுகடற்படைகளும் செயற்பட்டு வருகின்றன.

விசேடமாக பௌத்த மதத்தை அனுசரித்து வரும் இரு நாடுகளும் ஒரே கோட்பாட்டின் கீழ் இயங்கி சினேகபூர்வ தன்மைகளை வளர்த்துக்கொண்டுள்ளன.

இந்நிலையில் தாய்லாந்து கடற்பரப்பை மையமாக வைத்து ஆயுதம் கடத்த முயலும் எந்த சக்தியாக இருந்தாலும் நாம் அதனை அனுமதிக்கமாட்டோம்.இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட சிலரின் நடவடிக்கைகளை தாய்லாந்து கடற்படையினர் முறியடித்திருந்தனர் .

அந்த வகையில் இலங்கையைச்சேர்ந்த ஆயுதக்குழுவின் 3 உறுப்பினர்களை எமது கடற்படையினர் அண்மையில் கைது செய்தும் இருந்தனர். இதன் பின்னர் இலங்கைக்கடற்படையினரும் எமது நாட்டின் கடற்படையினரும் மிகுந்த விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதன் பின்னர் எந்த விதமான கடத்தல் சம்பவமும் நடைபெறவில்லை. மேலும் இலங்கைக்கடற் படையினருடன் புரிந்துணர்வு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இலங்கை கடற்படைக்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகிறோம் என்றார். (க-10)

## இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைததுபபீட மாணவர்களிற்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மு.ப 11 மணிக்கு இடம் பெறவுள்ளதால் அனைத்துப்பீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(க)

## மேலும் 50 இடங்கள்

# மண் சரிவு அபாயத்தை எதிர் நோக்குகின்றன

## புவியியல் ஆய்வுக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மண் சரிவு அபாயங்களை எதிர்நோக்கியுள்ள 50 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

மொறட்டுவ மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் ஆய்வுக்குழுக்கள்,புவியியல் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் இவ்விடங்கள் இனங்காணப்பட்டு,ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளுக்குரிய காரணங்களை கண்டறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் விசேட செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதும்,மேலும் மேலதிக உதவிகளை வழங்குமாறு மாகாண முதலமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (தி)

## இரண்டாவது உலக இந்து மாநாடு

# ஊர்காவற்றுறை பிரதேச போட்டி முடிவுகள் வெளியாகின

(ஊர்காவற்றுறை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இடம் பெற்ற இந்து மாநாட்டு எழுச்சி போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

பாடசாலைகளில் முதலாமிடத்தினை யா/ கரம்பொன் சண்முகநாத வித்தியாலயமும்,இரண்டாவது இடத்தை யா/ தம்பசிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்,இந்து அமைப்புகளில் முதலாமிடத்தினை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலையும, இரண்டாம் இடத்தை புளியங்கூடல் இந்து வாலிபர் சங்கமும்,ஆலயங்களில் முதலாமிடத்தினை நாரந்தனை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஆலயமும் ,இரண்டாம் இடத்தினை ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோவிலும் பெற்றன.

இந்து சமய எழுச்சிக் கிராமமாக தம்பாட்டி கிராமமமும்,இந்து மத குருவானவர்களில் சிவஸ்ரீ மகா கணபதீஸ்வரக்குருக்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சிறுவர் பாடசாலைகளில் முதலாம் இடத்தினை புளியங்கூடல் மகாமாரி முன்பள்ளியும், இரண்டாம் இடத்தினை அனலைதீவு அருணோதய முன்பள்ளியும், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களில் ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும்,வணிக அமைப்புகளில் ஊர்காவற்றுறை மணி அண்ணா களஞ்சியம்,அம்பிகா களஞ்சியம் என்பனவும் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றுள்ளன. (க-75)

## தினசரி தியானம்

# மகிழ்ச்சிக்கு வழி

புலன்கள் பேருண்மை சேர்ந்த அண்டத்தை நோக்கிப்பாயும் இயற்கையான தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளன. இந்தப்புறவினைகள் மனத்தின் அலைகளைச் சிதற அடித்து,அறிவாற்றலைப்பலவீனப்படுத்தி உள்ளுணர்வால் இயக்கப்படும் புலன்களது உணர்வுகளைத் திரையிட்டு மறைக்கிறது. ஒற்றுமையானது வேற்றுமைஎனப் புனைந்து கூறப்படுகிறது. பொய் மெய்யாகக் காட்சி அளிக்கிறது. துன்பம் இன்பமாகத் தோன்றுகிறது. உண்மைப் பொருளைக்காட்டிலும்,நிழலானது கவர்ச் சியாகவந்து ஆசை காட்டுகிறது.இது தான் மதி கெட்ட அறியாமையில் உழலும் மனிதன் தொடர்ந்து செல்லும் மகிழ்ச்சியான பாதையாக இருக்கிறது.

சுவாமி சிவானந்தர்

## சட்ட விரோத மீன்பிடித்தொழிலில்

# ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கடற்பரப்பினுள் சட்ட விரோதமாக மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கு எதிராக குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய நாட்டின் பல்வேறு கடற்பரப்புக்களிலும் சட்டவிரோதமான மீன் பிடித்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு,தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும்நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் வாக்கு மூலங்கள் பெறப்படவுள்ளன. இதனடிப்படையில் போதுமான காரணங்கள் இருப்பவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளதுடன்,தகுந்த ஆதாரம்இல்லாதவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மன்னார்,வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மீன் பிடித்தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.(தி)

THE ROYAL COLLEGE OF JAFFNA

"SPOKEN ENGLISH"
BY: VIGNESWARAN
ARCHERY

426(302), K.K.S ROAD, JAFFNA
BLACK ROAD, CHANKANAI

(6972)

## போராளிகள்...

பூவண்ணன் கடந்த புதன்கிழமை இரவு மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து போராளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(தி)

## இடைக்கால...

வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கு வருகை தந்துள்ள நோர்வேத் தூதுவர்கள் இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பது தொடர்பில் அரசு, புலிகள் இடையில் இணக்கப்பாடு ஒன்றைக் காணும் முயற்சியில் ஈடுபடவுள்ளனர.

(த)

### மாநாட்டு ஏற்பாடுகளை கவனிக்க

# அமைச்சர் மிலிந்த யப்பான் செல்வார்

(கொழும்பு)

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதி உதவி வழங்கும் மாநாட்டின் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக விஞ்ஞான தொழில் நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட யப்பானுக்கு பயணமாகவுள்ளார்.

டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதியுதவி வழங்கும் மாநாட்டில் பெரும்பாலான நாடுகள் பங்கேற்க விருப்பதால் அதற்கேற்றவாறு மாநாட்டின் ஏற்பாடுகளைக் கவனிக்கவும் யப்பான் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின் அவர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கவுமே அமைச்சர் மிலிந்த மொறகொட யப்பான் செல்லவுள்ளார்.(வ)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 27ம் திகதி காலை 10மணிக்கு ஊர்காவற்றுறை .பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.(க-75)

## யாழ்...

னரின் பலத்த பாதுகாப்புக்கு உட்பட்ட பிரதேசமுமாகும்.

மாணவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

இதேவேளை பிரஸ்தாப மாணவன் கடத்தப்பட்ட சம்பவம் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

## நோர்வேத்,...

பேசியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை நிர்வகிப்பதற்குரிய அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை அமைப்பது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரணட்டு நிலையை சுமுகமானநிலைக்கு கொண்டுவரும் இறுதிக்கட்ட முயற்சியாகவே எரிக் சோல்ஹெமின் கொழும்பு விஜயம் அமைந்திருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடனான சந்திப்பை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக நாளை செவ்வாய்க்கிழமை அவர் வன்னிக்கு செல்லவுள்ளார்.

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாட்டிற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் உள்ள நிலையில் 'நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இலங்கைக்கு வந்திருப்பது அரசு, புலிகள் போக்கில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மீண்டும் விரைவில் கொழும்பு வரவுள்ளார் என்றும் நோர்வேத்தூதரகம் அறிவித்துள்ளது.

(ம)

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

ஆசியாவில் முதலாம்தர (நம்பர் -1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு:- தற்போது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. எமது நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட பார ஊர்திகளை இன்று காலை 6.00மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டுசெல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வரபக்வான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P. NO. - 021-2222350

(C/6216)

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

JAFFNA TECHNICAL, INSTITUTE
JAFFNA, SRILANKA
REGD NO- 15251 T. P - 222 3335

தொழிற் பயிற்சிகள்

- RADIO, T.V, AND VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், COMPUTER, MONITOR, PRINTER, UPS என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
- MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இன மோட்டார், (f) பான் ரான்ஸ்போமர்கள் றீவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு THREE PHASE இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7மாதங்கள்)
- MOTOR CYCLE MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
- AIR CONDITIONING AND REFRIGERATION சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- CITY AND GUILDS OF LONDON EXAM
  1. POWER 2. ELECTRONICS

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

02. 06. 2003 (கிழமை நாட்களில்) 01.06.2003 (சனி ஞாயிறு நாட்களில்)

மேலதிக விபரங்கட்கு நேரில்

11/10 B, Stanly Road, Jaffna (Near K.K.S Road)

No. 07 Palaly Road, Jaffna.

DIRECTOR

(C/6215)

மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை, யுனிசெவ் ஆகியவற்றின் அனுசரணையுடன் சிறுவர் கழகங்களின் இணையம் நடாத்தும்

"மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி"

காலம்
26, 27.05.2003
29, 30.05.2003

இடம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி: இலவசம்

24.05.2003 சிறுவர் கழகங்களின் இணையம்

குறிப்பு:- 26.05.2003 (திங்கட்கிழமை) காலை 10மணிக்கு கண்காட்சி ஆரம்ப வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தினமும் காலை 09.00 - 05.00 மணிவரை மக்கள் பார்வையிடலாம். தென்மராட்சிப் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இந் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பினை வழங்கி உதவுமாறு அன்புடன் கல்விசார் அலுவலர்களினைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/6217)

இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டானிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளியம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார.கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப்பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

மணிசாமி

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.(பழைய லிங்கம் கூல்பார் அருகில்)
இல.54,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்(வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம்-காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை)

c-6207

வீட்டில் இருந்தே ஆங்கிலம் கற்று Diploma சான்றிதழ் ஒன்றை பெற நீங்கள் தயாரா?

தபால் மூலம் ஆங்கில பாடநெறி - SPOKEN ENGLISH BY POST

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

மேலதிக விபரங்களை Telephone மூலம் பெற அழையுங்கள் 08-201433

ஏன் யோசிக்கிறீங்க? உங்களாலும் ஆங்கிலத்தில் பேச முடியும்.

இலவசம் - FREE

பாடநெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்.

- ஆங்கில தமிழ் அகராதி
- சிங்கள பேச்சு பயிற்சி பாடநெறி
- அழகிய Bag ஒன்று

மேலதிக விபரங்களை தபால் மூலம் பெற நீள கடிதவுறையை அனுப்பவும்.

J.E.I. INSTITUTE, P.O. BOX. 119. KANDY

(C/6214)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.